விலை 50/=

சமூக முன்னேற்றத்திற்கான வார இதழ்...

# புதிய தமிழ் நாதம்

Puthiya Thamil Naatham

පුදිය තමිල් නාදම්

நாதம் 01 - வைகாசி 29 - 2019 / June 12 - 2019

puthiyathamilnaatham@gmail.com

புதிய தமிழ் நாதம் வார இதழில்
உங்கள் வணிக விளம்பரங்கள்
நியாயமான விலையில்
இடம்பெற வேண்டுமா?

தொடர்புகளுக்கு
0764917049

புதிய தமிழ் நாதம் எப்பொழுதும் உங்களுக்கான
சேவையினை வழங்க என்றும் முன்னிற்கும்.



# தமிழரும் பயங்கரவாத தடைச்சட்டமும்



## ஹிஸ்புல்லாவின் கருத்துக்கு ரனில் போர்க்கொடி மைத்திரியின் முடிவுக்கும் சரியான பதிலடி

## இலங்கையில் என்னதான் நடக்கிறது?








எங்கும் நாதம், என்றும் நாதம், எதிலும் நாதம், அதுவே நம் புதிய தமிழ் நாதம்.

# நேர்காணல்

Interview

உண்மையை உரக்கச் சொல்வோம்





நேர்காணல்- வவுனியூர் ரஜீவன்

இந்துமா சமுத்திரத்தின் பிராந்தியத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதன் மூலம்தான் சர்வதேச பயங்கரவாதத்தை தடுப்பதற்கும் இந்தியப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்து மக்களதும் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் எனத்தெரிவித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எத்தகைய தாக்குதல் நடந்தாலும் தமிழ்மக்களே பாதிக்கப்படுகின்றார்கள். எனவே தமிழ் மக்களையும் தமிழர் பிரதேசத்தையும் பாதுகாப்பதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் தான் முன்வரவேண்டும் என்றார்.

ஏப்ரல் 21 ஆம்திகதி தாக்குதல் மற்றும் பிரதமர் மோடியுடனான சந்திப்பு தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். புதிய தமிழ்நாதம் பத்திரிகைக்கான விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் ஏப்ரல் 21 ஆம் திகதி ஏற்பட்ட தாக்குதல் இலங்கையில் மட்டுமன்றி குறிப்பாக இந்தியாவிலும் அதன் பிரதிபலிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடுதான் இந்தியப் பிரதமரின் இலங்கைக்கான விஜயமாக அமைந்துள்ளது. இவ்வாறாக இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் தாக்குதல் இலங்கையை இந்தியா பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அவர்களுக்குண்டு. இதன் வெளிப்பாடுதான் இரண்டாவது தடவையாக பிரதமராகப் பதவியேற்ற நரேந்திரமோடி அவர்களை அவரது பதவியேற்புக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். உரிய நேரத்தில் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதை ஏற்றுக்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் குறுகியநேரத்தில் சந்தித்து முக்கிய கலந்துரையாடலை நடாத்தியுள்ளார்.

குறுகியநேர சந்திப்பாக இருந்தாலும் எமக்குக் கிடைத்த நேரத்தில் இலங்கையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவேண்டும் என்ற விடையத்தினையே நாம் பிரதான கோரிக்கையாக முன்வைத்துள்ளோம். மேலும் நாங்கள் கூறிய விடையங்களை செவிமடுத்த பிரதமர் புதுடில்லிக்கு வருகை தருமாறும் அங்கு விரிவான பேச்சுவார்த்தையை செய்வோம் என அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பானது விரைவில் நடைபெறவேண்டும் என்பதே எமது ஆவலாகவுள்ளது.

கேள்வி: தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைக்கவேண்டும் என்பதற்காக பலபோராட்டங்கள் இடம்பெற்று வந்தாலும் அவை அடக்கப்பட்ட ஒன்றாவே உள்ளது?

பதில்: தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைக்கவேண்டும் என்பதற்காக பலபோராட்டங்கள் ஜனநாயக ரீதியலும் ஆயுத ரீதியிலும் முன்னெடுத்துவந்த நிலையில் ஆயுத ரீதியான போராட்டத்தை பல நாடுகளின் துணையுடன் இலங்கை அரசாங்கம் இப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இதன் பின்னரான சூழலில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பிரச்சினை தொடர்பில் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு தீர்மானங்கள் அதிலும் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட ஜனாதிபதியும் அரச தரப்பினரும் வெளிநாட்டவர்களை இங்கு அனுமதிக்கமாட்டோம் அவர்களது போர்க்குற்ற விசாரணையை ஏற்கமாட்டோம் எனப் பல்வேறு கருத்துக்களை கூறிவந்தனர். இவ்வாறான நிலையில் ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதல் அனைத்து விதமான செயற்பாடுகளையும் மாற்றிவிட்டது. மெசாட் உள்ளிட்ட அனைத்து சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த விடையத்தை நாங்கள் சரியான முறையில் இந்தியாவுடனும் சர்வதேசத்துடனும் இராஜ தந்திர ரீதியிலும் இனப்பிரச்சனைத் தீர்வை எட்டுவதற்கும் பயன்படுத்தவேண்டும். தமிழ்பேசும் மக்கள் வாழ்விடங்களில் மக்களின் பாதுகாப்பு முக்கியம் இவ்வாறான நிலையையே தற்போது நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

கேள்வி: தமிழ் மக்களே தொடர்ந்தும் நெருக்கடிகளுக்குள் ளாக்கப்படுகின்றார்கள் ?

பதில்: இந்த அரசாங்கத்தினால் தமிழர்களுக்கே? இந்த நாட்டுக்கோ தகுந்த பாதுகாப்பினை வழங்க முடியவில்லை. அதிலும் மிக அதிகமாக தமிழர்கள் தான் இந்த நாட்டில் ஒவ்வொரு நிகழ்விலும் இனக்கலவரங்களினாலும் போரினாலும் ஏப்ரல் 21 தாக்குதலினாலும் பெருமளவில் கொல்லப்பட்டவர்களாக அழிக்கப்பட்டவர்களாக மற்றும் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதால் இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாடுகள் குறிப்பாக இந்திய நாடு தமிழர்களின் பிரதேசத்தையும் தமிழர்களையும் பாதுகாக்க முன்வரவேண்டும் இதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம். அதற்காகத்தான் பல திட்டங்களையும் உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் .

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடையத்தில் ஆட்சிக்கு வருகின்ற ஜனாதிபதி மற்றும் பிரதமர்கள் தீர்வினைக் காண்போம் எனக்கூறிவருகின்றார்கள். ஆட்சிக்கு வந்ததும் அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறுகின்றார்களே ?

பதில் நாங்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காகவே போராடி வருகின்றோம். பல இழப்புக்களைச் சந்திக்கின்றோம் இவ்வாறான நிலையில் இன்று எங்களுடைய பிரச்சினை சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கின்றது. எனினும் ஜனாதிபதி 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு தீர்வைக் காணலாம் என்று கூறுகின்றார் 13 ஆவது திருத்தச்சட்டம் ஒருபோதும் இனப்பிரச்சனைக்குத் தீர்வாகாது என 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோதே நாங்கள் இந்திய அரசுக்கு கூறிவிட்டோம்.

பாராளுமன்றத்தில் புதிய அரசியல் அமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு இடைக்கால அறிக்கை வந்தபோதும் அதனைக் குழப்புகின்ற விதத்திலுமாக சில நகர்வுகளை ஜனாதிபதி மேற்கொள்கின்றார்கள். எனினும் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் 47 நாடுகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இன்றும் இருக்கின்றன இவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இனப்பிரச்சினைக்கு ஒரு சமஷ்டிக் கட்டமைப்பில் தீர்வு ஏற்படவேண்டும்.

ஜனாதிபதிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு அதை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு உண்டு. சர்வதேச சமூகம் இதற்கு பதில் சொல்லவேண்டும் முழுமையாக நிறைவேற்றப்பட்டவேண்டும்.

தற்போதைய நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ்.தாக்குதல் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவிற்கும் அச்சுறுத்தலாகவே உள்ளது என்று இந்தியத் தரப்பு அறிவித்துள்ளது. இந்தநிலையில் இலங்கையில் சர்வதேச நாடுகள் கண்காணிப்பு அதிகரித்துள்ளது. இந்த நிலைமையை நாங்கள் முறையாகப் பயன்படுத்தவேண்டும். இலங்கையின் பாதுகாப்பு வடக்கு கிழக்கு பிரதேசத்தில் இந்தியாவின் பாதுகாப்பு அதிகரித்துள்ளது. இந்த நிலையை நாங்கள் கவனத்திற்கொண்டு அதற்கான ஏற்பாடுகளைத்தான் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். இந்த விடையங்களில் தமிழர் தரப்பு ஒன்றுபட்டு நிற்கவேண்டும் அவ்வாறு நிற்பதன் மூலம்தான் விரைவான தீர்க்கமான முடிவினை எடுக்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

மாவை சோ. சேனாதிராஜா
பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர், தமிழரசுக் கட்சி

# தமிழரும் பயங்கரவாத தடைச்சட்டமும்

இலங்கை அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை உற்று நோக்கும் போது தமிழ் மக்கள் தமது அறிவுபூர்வமான அரசியல் இருப்பை பலப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. மீளவும் அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு கைதுகளும் சோதனைகளும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதிலும் வடக்கு கிழக்கு பிரதேசம் அதிக நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கானதாக அமைந்தாலும் தமிழ் மக்கள் எத்தகைய அச்சுறுத்தலையும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படுத்தக் கூடிய விதத்தில் செயல்படவில்லை.ஆனாலும் தமிழ் மக்கள் மீது சோதனைகளும் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளது. இதனை அரசாங்கம் தடுக்கும் என்பதை விட அல்லது தற்போதுள்ள நிலையில் தளர்வு ஏற்பட்டாலும் தமிழர் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட போகின்ற இனம் என்பதை உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கைதீவில் யார் தாக்குதல் நடத்தினாலும் தமிழர் மீது கண்காணிப்பும் சோதனையும் நிகழும் என்பதற்கு அண்மைய தாக்குதல் சாட்சியாகும். அப்படியான சூழலில் தமிழர் அவசரகாலச் சட்டம் பற்றிய புரிதல் அவசியமானது. இக்கட்டுரையும் அத்தகைய புரிதலை ஏற்படுத்துவதற்கானதாகவே உள்ளது.

இலங்கையில் 1942 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டத்தின் பிரயோகம் நிகழ்ந்துவருகிறது. இது ஜப்பானுக்கு எதிராக பிரிதிதானியர் கொண்டுவந்த முதல் நடவடிக்கையாக பதிவாகியுள்ளது. இதன் பின்பு தமிழருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இத்தகைய சட்ட பிரமாணம் பின்னர் வந்த பயங்கரவாதச் சட்ட நடைமுறையால் தீவிரத்தன்மை கொண்டதாக அமைந்திருந்தது. தற்போதைய புதிய அவசரகாலப் பிரமாணங்கள் முன்னர் இலங்கையில் இருந்த சட்டப் பிரமாணங்களைவிட அதிகமானதாகவும் பயங்கரவாதச் சட்ட நடை முறையில் காணப்பட்ட விடயங்களை சிலவற்றை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசரகால விதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுளளது. இதன் கீழ் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை நோக்குவது அவசியமானது.

- ஒரு மக்கள் கூட்டத்தை அச்சுறுத்துவது.
- கொலை செய்தல் அல்லது கொலைக்கு துாண்டுதல் அது தொடர்பில் சட்டத்திற்கு புறம்பான முறையில் வலுக்களை பிரயோகித்தல்.
- இலங்கைக்குள் அல்லது வேறு ஒரு நாட்டின்ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்க முயலுதல்.
- அரசாங்க ஆதனம் அல்லது பொது சொத்துக்கள் மீது சேதம் விளை வித்தல்.
- அத்தியாவசிய சேவைக்கு இடையூறு விளைவித்தல்.
- அரச தனியார் வலையமைப்புக்களை அல்லது கணணிச் சேவையினை பாதிக்கு நடவடிக்ழகையில் ஈடுபடுதல்.
- மதம்சார் கலாசாரம் சார் மற்றும் மரபுரிமைகளுக்கு அழிவை ஏற்படுத் துதல்
- இலத்திரனியல் கடத்துகை மற்றும் சமிச்சைகளுக்கு முட்டுக்கட்டை போடுதல்
- பொதுமக்களின் நலனுக்கும் பாதுகாப்பிற்கும் பாதிப்பை ஏற்படுத்துதல்.
- மற்றும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடத் துாண்டுதல் என்பன அவசரகால விதியின் கீழ் ஜனாதிபதினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு உதவும் விதத்தில் நிலம் காணி வாகனம் என்பவற்றை கொள்வனவு செய்தல் பயன்படுத்துதல் அதற்கு துணைபோதல் உடல் சேவை வழங்குதல் குற்றமாகக் கருதப்படும். அத்தகைய சொத்துக்களை வைத்திருத்தல் உரிமை கோருதல் கட்டங்களை பராமரித்தல் கட்டங்களை வைத்திருத்'தல் கற்றச் செயலாக கருதி கைது செய்து நீதிமன்றில் நிறுத்தும் அதிகாரம் பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு கருதி தகுதி வாய்ந்த அதிகாரி அத்தகைய வாகனத்தை காணியை தேவைக் கெடுக்க முடியும்.


கூட்டங்கள் ஊர்வலங்கள் வெளியீடுகள் சுடுபடைக்கலங்கள் உட் பிரவேசிக்கும் உரிமை முதலியவற்றை கட்டுப்படுத்தல் தொடர்பான தடை செய்யும் அதிகாரம் அவசரகாலவிதியின் பிரகாரம் விதிக்கப்பட முடியும்.பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் விடயமாக கருதப்படும் போது அதன் மீது நடவடிக்கை எடுக்டக பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு. தேசியபாதுகாப்பிற்கும் சமுதாய வாழ்வுக்கும் பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் வெளியீடுகளை வெளிக்கொண்டுவருதல் ஒலிபரப்புக்களை செய்தல் செய்திகள் ஆசிரியர் தலையங்கங்கள் கட்டுரைகள் கடிதங்கள் கேலிச்சித்திரங்கள் கருத்துரைகள் உட்பட்ட ஆவணங்கள் படமுறைக்குறிப்புகள் நிழல்படங்கள் இயக்கப்பட திரைச் சின்னங்கள் தன்னியக்க அச்சுக்கருவிகள் தந்தி தொலைக்காட்சி நட வடிக்கைகள் குற்றச்செயலாக கருதப்படும். அதனை தகுதிவாய்ந்த அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

இதன் பிரகாரம் ஆளொருவரை மேற்பார்வை செய்தல் தேடுதல் கைது செய்தல்மற்றும் தடுத்து வைத்தல் அதிகாரம் அதிகாரமளிக்கப்பட்ட தரப்புக்குரியதாகும்.

இவ்வாறு பலவிடயங்களை உள்ளடக்கியதாக புதிய பிரிவு அவசரகால்ச்சட்டம் அமைக்'கப்பட்டுள்ளது. குறிப்பாக ஒருவருக்கு தீங்கிளைத்தல் அல்லது தீங்கினை ஏற்படுத்த துாண்டுதல் என்பது குற்றமாகக் கருதப்டபடுமிடத்து 10தொடக்கம் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க முடியுமெனச் சட்டம் கூறுகின்றது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் தமது நாளாந்த நடைமுறைகளை மேற்கொள்வது அவசியமானதென தெரிகிறது. குறிப்பாக உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் முதல் பாராளுமன்ற உறுப்பினர் வரை பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் பற்றிய தெளிவை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் பொதுமக்கள் பாதுகாப்புக்க ஏற்படும் இடையூறுகளை நேரடியாக களத்தில் நின்று பாதுகாக்க வேண்டும். நாளாந்த வாழ்க்கை முறையை மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கும் மக்களின் நலனை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். அரச அதிகாரிகள் முதல் பாராளுமன்ற உறுப்பினர் வரையும் அத்தகைய அறிவூட்டலையும் பாதுகாப்பினையும் ஏற்படுத்தும் பொறுப்பாண்மை உடையவர்களாக உள்ளனர்.

எனவே பொதுமக்களது பாதுகாப்பினை ஏற்படத்தும் விதத்தில் அவர்களது சட்டம் தொடர்பான அறிவூட்டலை ஏற்படுத்த வேண்டும்'. அதனை அனைத்து தரப்பும் பின்பற்றுவதன் மூலம் அமைதியான பாதகாப்பான இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளை தவிர்ப்பதற்கு அவர்கள் அறிவூட்டப்படுவதுடன் அரசிய அடிமட்ட பிரிவிலிருந்து உயர் பிரிவு வரையும் இணைந்து செயல்பட வேண்டும். கைது செய்ய முன்பு அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். கைதின் பின்பு அவர்களை மீட்பது அதற்காக முயலுவது அனைத்துமே விரையமான செயலாகும். இலங்கை அரசாங்கம் முன்வைத்த அவசரகால விதிகளை தமிழ் மக்களுக்கு அவர்களது மொழியில் அவர்களுக்குள் கொண்டு செல்லுதல் வேண்டும். அதற்கான நடவடிக்கையே பிரதான நெருக்கடியிலிருந்து அவர்களைப் பாது காக்கும் விடயமாகும.



கலாநிதி - கே.ரீ.கணேசலிங்கம்

# இன்று தமிழும் தமிழரும்

கலைவல்லார் (கலாபூசணம்)
நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)
நிறுவகலைவல்லார் (கலாபூசணம்)
நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் கொல்லிழுக்கும் பட்டு" (குறள் 127)**

இக்குறளினூடாக உலக வாழ்வியல் மெய்யில் தந்த வள்ளுவனார் கூறுவதென்ன?. சில உரையாசிரியர் இக்குறளுக்குப் பொருள் கூறும்போது இது ஒருவரின் மனதை புண்படுத்தும் விதமாகச் சொற்களை உதிர்க்கக்கூடாது என்றும், இன்னும் சிலர் நா சுவை உணர்வைத் தருவதால் சுவைக்காக அளவுக்கதிகமாய் உண்டு உடலை நோய் படுத்திவிடக்கூடாது (அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு) என்பதாகவும் பொருள் கண்டனர். ஆனால்

**"தீயினால் சுட்ட புண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு" (குறள் 129)**

என்ற குறளின் மூலம் ஒருவரைத் தகாத வார்த்தையினால் திட்டினால் அது அவர் மனதில் மாறா தளும்பாக மாறிவிடும் என பொருள் தரப்படுகிறது.

எனவே நுண்ணிய நோக்கில் ஆய்வோமாகில் குறள் 127 எமக்குத்தரும் பொருள். யாகவாராயினும் என்றது உன்னால் எதைப் பாதுகாக்க முடியாவிட்டாலும் "நாவை" பாதுகாக்க வேண்டும் என்கிறார். எம் உடலின் ஒவ்வொரு உறுப்புமே இன்றியமையாதது. கண்ணை, காதை , மூக்கை எனக் குறிப்பிடாது நாவுக்கு மட்டும் முதன்மை கொடு என்கிறாரே! இது ஏற்புடைய ஒரு கூற்றா? ஆம், "நா" இல்லை என்றால் எம்மால் பேச முடியாது அதாவது "நா" மொழிக்குரியது. ஆங்கிலேயர் கூட தாய்மொழி என்ற சொல்லுக்கு "மதர் இரங்" என்றே கூறுகின்றார்கள், ஆகையால் வள்ளுவனார் "எதை உன்னால் பாதுகாக்க முடியாவிட்டாலும் உன்தாய்மொழியை பாதுகாக்க வேண்டும். இல்லையேல் உன் பின்வரும் தலைமுறை உன்னைத் தூற்றும், பழிக்கும் என்றுதானே பொருள் கொள்ள வேண்டும்.

**"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்." (குறள் 958)**

என இன்னொரு குறளிலே செப்புகின்றார். இக்குறள் குடிமை என்னும் அதிகாரத்தில் கூறப்படும் ஒன்றாகும். இங்கு "நலம்" என உலகமெய்யியல் தந்த செந்நாப் போதர் பெருநாவலர் எதை கூறுகின்றார். உலகில் வாழும் ஒருவன் தனது மொழியில், இனத்தில், நாட்டில் பற்றில்லாமல் இருப்பானாயின் அவனது பிறப்பு ஐயத்திற்கு உரியதென்பார்.

பல அறிஞர் பெருமக்கள் கூறும்போது வள்ளுவனார் தமிழ்மொழி பற்றியோ, தமிழ் இனம் பற்றியோ, தமிழ்மண் பற்றியோ எதுவும் கூறவில்லை என்றும், இச்சொற்களைத் தன்னும் பயன்படுத்தவில்லை. எனக்குறை கூறுவர். ஆனால் மேற்கூறிய குறள்கள் தமிழ்மொழியிலே தான் யாக்கப்பெற்றவை. தமிழினத்தை, தமிழ் மண்ணைக்குறியாக வைத்தே யாத்திருக்கின்றார்.

**"மனநலம் மன்னுயிர்க் காக்கும் இனநலம்
எல்லாப் புகழும் தரும்." (குறள் 451)**

ஒருவருடைய அகஈகம் உலகுவாழ் மக்களுக்கான ஆக்கத்தைத் தருவது. அது இனநலம் சார்ந்ததாக இருக்குமாயின் அவனுக்கு அது இறவாப்புகழைத் தம் உன்பதாக வெளிப்படுத்துகின்றார். இன்று இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் சென்றபோதும் நாம் திருவள்ளுவரை, தொல்காப்பியரை, சங்க இலக்கியப்புலவர்களை, இளங்கோ அடிகளை, ஔவையாரை இன்னும் பல தமிழ் ஈகிகளை நினைவு கூர்ந்து கொண்டு, அவர் புகழ்பாடியே நிற்கின்றோம். அவர்கள் தமிழினம் இருக்கும் வரை இறவாப்புகழாளராக வாழ்ந்து கொண்டே இருப்பார்கள்.

**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நன்றே நிலைபெற நீவீர் நினைந்து உய்மின்
என்பார் திருமந்திரத்தில் திருமூல நாயனார்."**

அதாவது உலகில் மாந்த இனம் ஒன்றுதான் கடவுளும் ஒன்றுதான், நல்லதை நினையுங்கள், இறந்து விடுவோம் என்ற பயம் (நாணம்) வேண்டாம். நாம் நினைப்பது போல் நற்பேறு (நற்கதி) எமக்குக் கிடைக்கப்போவதில்லை. எனவே நல்லவை உலகில், நடைபெற நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்படுங்கள் என்கின்றார்.

உலகில் பேசப்படும் மொழிகள் கிட்டத்தட்ட 7000 என்றும் எழுத்துள்ள மொழிகள் அண்ணளவாக 700 என்றும் இவற்றில் இலக்கிய இலக்கணச் செழுமையுடன் இருப்பவை 200 ஆய் இருக்கும் என்றும் கூறப்படுகிறது. இம்மொழிகள் தமிழ்மொழி போல் முத்தமிழாய் இல்லையென்றும் அறிஞர் கூறு கின்றனர். காலவெள்ளத்திற்கும், செயற்கை அழிப்பிற்கும் தப்பிப்பிழைத்து தமிழன்னையின் புதையலாய், தமிழ்மொழியின், தமிழினத்தின் சான்றாய் தமிழினத்தை தலைநிமிர்த்தி வைத்திருப்பது தொல்காப்பியர் செய் தொல்காப்பியமே.

இதில் மொழியின் பெயர் திருத்தமாக மொழியுணர்வை விதந்து பார்க்கும் பரப்புரைகளாக இருப்பதால் தொன்று தொட்டு தொல்லறிஞர் மொழியிலும், மொழிவளர்ச்சியிலும் மீ உயர் ஈடுபாடு கொண்டிருந்தனர் எனலாம். எடுத்துக்காட்டாக (எ.கா) "தமிழ் கூறு நல்லுலகம் (தொல்பாயிரம்)" , "தமிழென்கிளவி (தொல்: எழுத்து 386)", "செந்தமிழ் நிலத்து வழக்கு (தொல்.எச்ச.398)", "செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம் (தொல்.எச்ச.400)" என்றவாறு தொல்காப்பியம் விளிக்கும்,

நாவலம் தேயமாம் (இன்றைய இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை) இந்தியாவினுள் 3800 ஆண்டுகளுக்கு முன் தொல்தமிழர் வாழ்விடமாம் சிந்து வெளியில் வடவேத ஆரியரின் ஊடுருவல், அதன்பின் கி.மு 6 ஆம் நூற்றாண்டளவில் பாரசிகரின் (இன்றைய இசுலாமியர்) ஊடுருவல், இவர்களின் தமிழ்நாடுவரையிலான ஊடுருவலும் அவர்தம் மேலாண்மையும், அவர்களின் மொழிகளான பிராகிருதம்,

பாளி, மாகதி சூரசேனி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளின் தாக்கங்கள் இருந்தபோதிலும் தமிழ்மொழியானது தனது தனித்தன்மையை இழந்துவிடாது எதிர்த்து நின்றது. தமிழ்நிலம் பலபிரிவுகளாகப் பிரிந்து கிடந்ததினால் பல திசைவழக்குகள் தோன்றி இலக்கியத்தரமும், திறமும் பெற்று தமிழ் செம்மொழியானதென்பதை தொல்காப்பியரும், பனம்பாரணாரும் சுட்டுவர். செந்தமிழ் என்ற சொல் வேற்றுமொழிக் கலப்பற்ற தமிழ் என்ற பொருளை தமிழ்ப்பேரகராதி தருகிறது. செந்தமிழ் என்ற சொல் பற்றி முனைவர் செ.வை.சண்முகம் அவர்கள் விளக்கும்போது, இச்சொல் உணர்வுநிலையில் இலக்கணவரம்பை வலியுறுத்துவதாகவும், செயல் நிலையில் செம்மொழி ஆக்கத்தை வலியுறுத்துவதாகவும் மதிப்பீட்டு நிலையில் இலக்கணம் வற்புறுத்தாவிடின் கிளை மொழிகள் தோன்றி புதுமொழிகளாக மாறும் என எச்சரிப்பதாகவும் விளக்கியுள்ளார்.

"மொழி அழிந்தால் இனமில்லை, இனமழிந்தால் நாடில்லை." என்பது உலக வழக்கு. எனவே தமிழினப் பகைவர்கள் முதலில் எடுக்கும் கருவி (ஆயுதம்) மொழி சிதைப்பும், அழிப்பும் தான். இந்தியப் பெருநிலப்பரப்பில் மட்டும் இன்று கிட்டத்தட்ட 153 புதியமொழிகள் தமிழை வேராகவும், வித்தாகவும் கொண்டு வாழ்கின்றன. ஏன் உலகமொழிகள் என்று சொல்லப்படும் தொல் இலத்தீன் கிரேக்க மொழிகளும் பல தமிழ்ச் சொற்களை உள்வாங்கி ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு வ்ழங்கியுள்ளன. கி.பி ஆண்டுத் தொடக்கத்திலேயே தமிழ் நாட்டுள் ஊடுருவிய வடமொழியாளர்களான (சமய வடிவில்) வைதீக வேத ஆரியர், பௌத்த, சமண சமயத்தவர்களின் ஊடுருவல் களப்பிரர், பல்லவர் என்ற வடிவிலே உள்ளிட்டதால் தமிழ்மொழிச் சிதைப்பும், அழிப்பும் தலைவிரித்தாடத் தொடங்கியது எனலாம்.

வைதீகவே வடமொழியாளர் தமிழைத் தீட்டு (நீச) மொழி என்றனர். கோவில் பூசைகள் வடமொழி சமஸ்கிருதத்தில் நடத்தலாம் என்றனர். தமிழ்க் கடவுளர்களான சிவன்,முருகன், கொற்றவை (அம்மன், காளி) போன்றோர் அப்புறப்படுத்தப்பட்டு வட நாட்டுக்கடவுளர்களான உருத்திரன், சுப்பிரமணியன், துர்க்கை, விநாயகர் போன்றோர் முன்னிலைப்படுத்தப்பெற்றனர். முத்தொழிலோன் (சிவன்) என்ற தமிழர் கடவுள் பதவி இறக்கப்பட்டு அழிப்புக்கு மட்டும் ஆனவராக தமிழர் வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு சுடுகாட்டிற்கு அனுப்பப்பட்டார். (உருத்திரன் என்ற பெயரில்) தமிழர்களையும் சாதிய (வர்ணாச்சிரம்) பகுப்பிலே கடைச்சாதியாக்கி இவர்கள் இவர்களிலும் உயர்ந்த சாதிக்காரரான பிராமணர், அரசர் (சத்திரியர்), வணிகர்களுக்கு எந்த முணுமுணுப்புமில்லாமல் தொண்டு (அடிமைத்தொழில்) செய்யவேண்டும் என்று மது (ததீ) நெறிமூலம் பணிக் கப்பட்டனர்.

இது தமிழரைக் கூறுபோட்டுப் பெலவீனப் படுத்துவதற்காகவே செயற்படுத்தப் படுகிறது. எந்த சமத்துவ சமநீதி, முற்போக்குச் சிந்தனைகளும், பகுத்தறிவில், அறி வியலில் முன்னேற்றமும் உலகம் பேசிக்கொண்டிருந்தாலும் தமிழன் தாழ்வுணர்ச் சியுடனும், அடிமைத்தனத்துடனும், நலம் எடுத்த நாம்பன் போல உணரச்சியற்றவனாக 2000 ஆண்டுகள் சென்ற பின்னும் எந்தவித மாறுதலுமின்றி "கழுதை தேய்ந்து சித் தெறும்பு" நிலைக்கு ஆகிக்கொண்டிருக்கின்றான். இருந்தாலும் காலத்திற்குக்காலம் "அல்லிபூத்தாற் போன்று தமிழ் உணர்வு, ஈக உணர்வு கொண்ட தமிழர்களால் க்காப்பற்றப்பட்டு புடம்போடப்படுகிறது. தமிழ்மொழி.

தமிழ்நாட்டில் கி.பி இல் தொடங்கிய கன்னட வடுகரான களப்பிரர் ஆட்சி ஆனது வடநாட்டு மதங்களான அருக (சமண) பௌத்த மதங்களுக்கு முன்னுரிமை வழங்கியதால் அவர்களின் மதமொழிகளான பாகத, சங்கத, பாளிமொழிகள் மதப்போர்வையில் தமிழ்நாட்டுள் உள்ளிட்டன. அதேவேளை வைதீக வேத ஆரியமதமும், தமிழ் மரபில் உருவாகிய ஆசீவகமும் தமிழ்நாட்டில் காலூன்றியிருந்தன. இவை மாத்திரமல்லாது ஆதி சிவனியம் அல்லது வீரசைவர் அல்லது கொடுஞ்சிவனியமென்ற மதமும் குறைந்த அளவினரோடு இயங்கிக்கொண்டிருந்தன. இச்சிவனியம் கபாலிசர், பசுபதர், களாமுகர் என்ற மூன்று பிரிவினராய் காணப்பட்டனர். இக்கொடுஞ்சிவனியம் கருநாடகம், குசரா த்தி, மராட்டியம், நேபாளம், உஞ்ஞை, புவனேசுவரத்திலும் மிகையாகவும், தமிழ் நாட்டில் மிகக்குறைந்த அளவிலும் காணப்பட்டனர். இச்சிவனியர்கள் மிகவும் தமிழுண ர்வுமிக்கவர்களாகக் காணப்பட்டனராம். புறநானூற்றிற்கு உரை எழுதிய முனைவர் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் தமதுரையில் தமிழ்நாட்டுச் சிலனியர்களின் தமிழ்பற்று, உணர்வுபற்றி வெளிப்படுத்தியுள்ளாராம். கி.பி 7-8 ஆம் நூற்றாண்டு வாழ்ந்த திருநாவுக்கரசர் (அப்பர் / தருமசேனர்) கபாலிசராகவும், திருஞானசம்பந்தர் (தமிழ்ஞானசம்பந்தர்) பசுபதராகவும், சுந்தரமூர்த்தியார் காளமுகராகவும் காணப்பட்டதாக சேக்கிழாரின் பெரிய தொன்மம் (புராணம்) சுட்டுகின்றது.

தொடரும்...

# இலங்கையில் என்னதான் நடக்கிறது?

சின்னஞ்சிறு குட்டித்தீவான இலங்கையில் வரலாற்றுக்கு முந்தைய காலந் தொட்டு வசித்து வருகின்ற தமிழ்த் தேசிய இனத்தை இல்லாதொழித்து அதனை ஒரு சிங்கள பௌத்த நாடாக மாற்றிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு பௌத்த மதகுருமார்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் ஆட்டத்திற்கு ஏற்ப ஆட்சியாளர்களும். தாளமிடுகின்றனர். இதில் எந்த பேரினவாதக் கட்சியும் ஒன்றுக்கொன்று சளைத்ததில்லை. இலங்கை தேசியம் என்பது சிங்கள தேசியம் என்ற எண்ணக்கருவைத் தோற்றுவித்தவர் அநாகரிக தர்மபால என்னும் பௌத்த துறவியாவார்.

அன்றிலிருந்து இலங்கைக்கு ஏழரை நாட்டுச் சனி பிடித்தது. இன்றுவரை அது இந்நாட்டை விட்டபாடில்லை. இன்றும்கூட பொதுபல சேனாவின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் இது சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் உணர்ந்து நடக்க வேண்டும் என்று உரத்துக் கூறியிருக்கின்றார்.

பாராளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பிற்கான வரைபிலும் கூட பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரைபு யாப்பை உருவாக்கும் பணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் பேச்சாளரான சுமந்திரனும் பங்குபற்றியிருந்தனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இந்நாட்டில் வசிக்கின்ற சகல தேசிய இனங்களின் உரிமைகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் என்று கூறி ஆட்சிக்கு வந்த புதிய நல்லாட்சி அரசாங்கம் தமிழர்களின் பங்குபற்றலுடன் உருவாக்கிய அரசியல் யாப்பு வரைபிலும் தமிழ் தேசிய இனம் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டுள்ளது.

இலங்கை பல தேசிய இனங்கள் இணைந்து வாழ்கின்ற ஒரு நாடு என்பதை பௌத்த மதகுருமார்களும் அவர்களைத் திருப்தியடையச் செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படும் அரசியல் தலைவர்களும் ஏற்க மறுக்கின்றனர். இதுவே இன்றைய பல பிரச்சினைகளுக்கும் காரணம். இலங்கையின் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் ஒரு நோயாளியின் உள்ளங்கையில் இருக்கும் புண்ணுக்கு இதயத்தில் சத்திரசிகிச்சை செய்கின்றனர். இதனால் எமது தீவின் எழிலை அனுபவிப்பதற்காக மட்டுமன்றி அதன் பூகோள அமைவிடம் மற்றும் அதன் கேந்திர முக்கியத்துவம் என்பவற்றையும் கருத்திற்கொண்டு காலூன்றுவதற்கு வல்லூறுகளும் கழுகுகளும் வட்டமிட்ட வண்ணம் உள்ளன.

இவைகள் ஏதோ எமக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக நாடகமாடி தமது கால்களை இத்தீவில் நன்கு ஊன்றிக்கொள்ள முயற்சிக்கின்றன. இதற்காக நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி சமூகங்களுக்குள் ஒற்றுமையைக் குலைத்து ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்க்கும் நிலையைத் தோற்றுவித்து நாட்டை தொடர்ந்தும் இராணுவத்தின் கோரப்பிடிக்குள் வைத்திருப்பதையே இலங்கையின் ஆளும்வர்க்கங்கள் விரும்புகின்றன.

இலங்கையில் கால்பதிக்க விரும்பும் சர்வதேச சக்திகளும் அதனை தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள முயற்சிக்கின்றன. தற்போது இலங்கையில் இடம்பெற்ற இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாதத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் அதன் பின்னர் இடம்பெற்ற இஸ்லாமியர்களுக்கு எதிரான சிங்கள பேரினவாதிகளின் தாக்குதல்கள் பௌத்தமதத் துறவிகளும் சிங்கள பௌத்த அடிப்படைவாத அரசியல்வாதிகளும் தெரிவித்துவரும் கருத்துக்கள் ஆகியவற்றை நோக்கும்போது இந்நாடு தற்போதைக்கு அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதை நிரூபிக்கின்றன.



தேசிய இன விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்தவர்கள் இப்பொழுதுதான் உண்மையான பயங்கரவாதத்திற்கு முகம் கொடுத்திருக்கின்றனர். சிங்கள பௌத்த மேலாதிக்க ஆளும் வர்க்கத்தினர் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்காகவும் தமது மேலாதிக்கவாத சிந்தனையின் தோல்வியைத் தற்காலிகமாகப் பிற்போடுவதற்காகவும் அனைத்து சர்வதேச சமூகத்தையும் இலங்கையில் கால்பதிக்க அனுமதித்துள்ளனர்.

## இது ஆபத்தானது

நாட்டின் இறைமையை விட்டுக்கொடுத்தாலும் கொடுப்போம் ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கமாட்டோம் என்பதில் சிங்கள பௌத்த மேலாதிக்கம் உறுதியாக இருக்கிறது. தமிழ்த் தேசிய இனத்தை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காகவே இஸ்லாமியர்களுக்கு சகல சலுகைகளையும் வழங்கியது. அவர்களை தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராகவும் திருப்பியிருந்தது.

வடக்கு-கிழக்கு வாழ் இஸ்லாமியர்கள் இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் எப்படி தமிழ்த் தேசிய இனத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டனரோ அதனைப் போன்றே இனி வருங்காலங்களிலும் செயற்படுவதுதான் அவர்களுக்குப் பாதுகாப்பானதாக அமையும். அதனை அவர்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழ்த் தேசிய இனம் இலங்கையின் இறைமையையும் காப்பாற்றி, தனது சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதனூடாக சிங்கள பௌத்த ஆதிக்க சக்திகளுக்கு இஸ்லாமியர்களின் உதவி இனி தேவைப்படாது என்ற நிலை தோன்றியுள்ளது. எனவே, அவர்களுக்கு வழங்கிய சலுகைகளை நிறுத்துவதற்கும் இதுவரை அளித்து வந்த சலுகைகளினூடாக இஸ்லாமிய சமூகம் அடைந்துள்ள வளர்ச்சியை தடுப்பதற்கும் சிங்கள பேரினவாதம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கைத்தீவின் உண்மையான தேசப்பற்றாளர்களும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் நிலையான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் உறுதியுடன் செயற்படுபவர்களும் தமிழ்த் தேசிய இனத்தவர்களே என்பதை சகலருக்கும் உணர்த்த வேண்டிய தருணம் வந்துவிட்டது.

விடுதலைக்காகப் போராடும் தேசிய இனத்திற்குத்தான் உண்மையான தேசப்பற்று இருக்கும். மேலாதிக்க சக்திகள் எப்பொழுதும் தமது இருப்பைக் காக்க எத்தகைய தீய சக்திகளுடனும் கைகோர்க்கும். அது தேச பக்தியில் இருந்து அவர்களை வெகுதூரம் விலகிச்செல்வதற்கே வழிவகுக்கும். இந்த உண்மையைப் புரிந்துகொண்டு நாட்டையும் தேசிய இனத்தையும் காக்க சகல முற்போக்கு சக்திகளும் ஜனநாயக சக்திகளும் கைகோர்ப்போம்.

**என் சிவசக்தி ஆனந்தன்**
பாராளுமன்ற உறுப்பினர்.
வன்னி மாவட்டம்.

# சிறுகதை

திருநகர் நடராசாவின்



# பேசிப்பறந்த கிளி

அவர் வருவாரா? என்மனம் என்னை நச்சரித்துக் கொண்டே இருந்தது. யார் அவர்! அவருக்கும் எனக்கும் என்ன தொடர்பு தெனிப் பிள்ளையார் கோயிலில் சந்தித்ததிலிருந்து கதைத்துப் பேசியதால் ஏற்பட்ட சிலகாலப்பழக்கம் அதனால் ஏற்பட்ட உறவு. எங்கள் ஊரில் எத்தனையோ இளைஞர்களைப் பார்த்திருக்கிறேன் பழகியிருக்கிறேன். ஒருவருமே என் நெஞ்சைத் தொடவில்லை. அவர் ஒருவர் தான் என் நெஞ்சில் வந்து குந்திக் கொண்டார். இதற்குப் பெயர்தான் காதலா? பதினைந்து நாட்களுக்கு முன்னர் எங்கள் வீட்டுக்கு வந்து என் ஐயாவோடும் என்னோடும் கதைத்திருந்து விட்டு நாளை வருவதாகக் கூறிப் போனவர் இன்று வரை வரவில்லையே எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மனம் என் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் குமைந்து கொண்டிருந்தது.

மனச்சோர்வோடு அன்று பிள்ளையார் கோயிலுக்குப் போயிருந்தேன். கண்கள் அவரைத் தான் தேடிக்கொண்டிருந்தன. கோயிலைச் சுற்றிக்கும்பிட்டு முடிந்ததும் வெளி வாசலுக்கு வந்து ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு அவரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவர் வருவது தெரிந்தது என் பிரார்த்தனை வீணாகவில்லை.

அவர் நேரே கோயிலுக்குள் சென்று வணங்கிவிட்டு வெளியே வந்தவர் என்னைக் கண்டு கொண்டவர். எனக்கு பக்கத்தில் வந்தார். நான் தெரியாதவள் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். ஊரில் இருந்து அப்பா என்னை உடனடியாக வரும்படி தந்தி கொடுத்திருந்தார். அதனால் போய்விட்டேன். என்றார். ஏன் ஆருக்காவது சுகவீனமா என்று நான் கேட்டேன்.

என் அப்பாவின் அக்கா குடும்பம் திருகோணமலையில் இருக்கினம் அப்பாதான் அடிக்கடி போய் வருவார் மாமி பாரிசவாத நோயினால் நடமாடமுடியாமல் முடங்கிப் போனா என்னையும் கூட்டிக்கொண்டு வரும்படி அப்பாவுக்கு அறிவித்திருந்தார். அதன-ால்த்தான் அப்பா எனக்குத்தந்தி கொடுத்து என்னையும் கூட்டிக்கொண்டு போனவர். என்றார். உங்களைக் கூப்பிட என்ன காரணம்? நான் கேட்டேன். அவர் கொஞ்சநேரம் பேசாமல் இருந்தார். இதுவரைகாலமும் அப்பாவுக்கும் மாமிக்கும் இருந்த இரத்த உறவைத்தவிர குடும்ப உறவு கிடையாது அதனால் தான் உயிரோடு இருக்கும் போதே தன்னுடைய கடைசி மகளை எனக்கு கட்டிவைக்க வேண்டும். என்ற ஆசையாம் என்றார். ஓகோ அதற்காகத்தான் உங்களைக் கூப்பிட்டு மாப்பிள்ளை பார்த்தார்களோ அப்போ நிச்சயதார்த்தம் எல்லாம் முடிஞ்சுதோ என்று கேட்டேன்.

"சே..சே.. அப்படியெல்லாம் இல்லை என்னும் முடிவாகவில்லை". என்றார்.

"உங்கள் மாமி குடும்பம் வசதியான குடும்பமா என்று கேட்டேன்.

"வட்டிக்குப்பணம் கொடுக்கிற குடும்பம் என்ற அவர் ஏன் இதை எல்லாம் கேட்கிறீர்கள் என்று திருப்பிக்கேட்டார் சும்மா கேட்டேன் எண்டன்.

"சரி போகலாமா என்றார்

நான் எழுந்து வீட்டுக்கு வந்திட்டுப் போங்கோ என்றன்.

இன்னொரு நாளைக்கு வாரன் என்டார். இப்போ வாங்கோ உங்களோடு தனியாகக் கதைக்க வேண்டும் எண்டன். அவர் ஒன்றும் பேசேல்ல. இருவரும் வீட்டுக்கு வந்தபோது அம்மா வழக்கம் போல் சந்தை வியாபாரத்திற்குப் போய்விட்டா ஐயா மட்டும் இருந்தார்.

ஐயா அவரை உட்காரவைத்துக் கதைத்துக் கொண்டிருந்தார். நான் சமையலைக் கவனிக்க அடுப்பறைப் பக்கம் போய்விட்டேன். ஐயாவும் அவரும் மனம்விட்டுக் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருச்சினம். சமையல் முடிச்சு விட்டு அவயறிந்து அவர் களிடம் வந்தன்.

கௌரி சமயல் முடிஞ்சால் இந்தத் தம்பிக்கு சாப்பாடு குடு என்றார் ஐயா. வேண்டாம் ஐயா என்டு எழும்பினர் அவர். தம்பி பேசாமல் உக்காருங்கோ நீங்கள் சாப்பிட்டுத்தான் போவேணும். தம்பி ஏன் கூச்சப்படுறியள் நாங்கள் அன்னியர் இல்லை நாங்களும் மனித் சாதிதான் ஊருக்கென்று ஒரு கலாச்சாரம் இருக்கும் இப்படி மதத்திற்கு இனத்திற்கு என்றெல்லாம் கலாச்சாரங்கள் மாறுபடலாம் ஆனால் மனிதன் நற்பண்புகளில் இருந்து விலகிப்போகக்கூடாது நாங்கள் குடுத்து வாழ்ந்த குடும்பம் தம்பி" என்று உட்கார வைச்சார்.

என் மனவிருப்பத்தை அவருக்குச் சொல்ல வேண்டும் என்ற ஆசையும் ஆவலும் இருந்தது அதை நேரில் வெளிப்படுத்த அச்சம் தடுத்து விட்டது நேரம் கிடைக்கும் போது வீட்டுக்கு வந்திட்டுப் போங்கோ" என்று சொன்னன். சரி என்று அவர் தலை ஆட்டிவிட்டுப் போனார்

அவர் போன சமயம் என் அம்மாவும் வந்துவிட்டா இன்றைக்கு விற்பதற்குத் தேங்காய் இல்லை எல்லாம் முடிஞ்சுது இனி நாளைக்குத்தான் என்றபடி உள்ளே வந்த அம்மாவின் கவனம் அவர் மேல் திரும்பிச்சு. ஆர் அந்தப் பொடியன் ஏன் வந்தவன் என்று அம்மா என்னைக் கேட்டா.

ஐயாவுக்குத் தெரிந்தவராம் என்று பழியை ஐயாமேல் போட்டுவிட்டு நான் மெல்ல மெல்ல குசினிப்பக்கம் நழுவிவிட்டன் ஐயா. அவள்தான் அநுபவம் இல்லாத பிள்ளை நல்லது கெட்டது விளங்காது. உங்களுக்குத் தெரியாதா? ஒரு குமர்ப்பிள்ளை இருக்கிற வீட்டில ஆம்பிளையளை வீட்டுக்கு எடுக்கலாமா எங்களின்ற வேலியில ஒரு பொட் டோட்டை தெரிஞ்சாலும் அதை இதையும் வச்சு அடைக்கிற நீங்கள் கவனிக்கிறியள்தானே என்ற அம்மா அவன் எங்கத்தையப்பொடியன் என்று ஐயாவைக் கேட்டா அம்மா. அவன் கிளிநொச்சியைச் சேர்ந்த பொடியன் இங்க உள்ள ஆட்களோடு வந்து நின்டு கட்டிடவேலை செய்கிறான் என்டார் ஐயா.


இந்த ஊர்ப்பகுதி ஆக்கள் அங்கத்தைய ஆட்களைச் சேர்த்து வேலை செய்ய மாட் டார்களே என்று கேட்டா அம்மா.

அவனுடைய தொழில் திறமையும் நற்பண்பும் தான் அதற்குக்காரணம் நான் அளவிட்டுப் பார்த்ததில் அவன் பணிவும் பண்பாடும் மரியாதையும் நேர்மையான குணமும் கொண்ட பொடியன் மனதில் கள்ளம் கபடு இல்லாத செயலாளி என்று ஐயா சொன்னார். எப்படி இருந்தாலும் வந்தான் வரத்தானை நம்பக்கூடாது" என்று தன் தீர்மானத்திலிருந்து விலகாமல் எச்சரிக்கை விடுத்ததும் ஐயா பேசாமல் இருந்துவிட்டார்.

ஒரு வாரம் கழித்து அவர் தோல்பையைத் தோளில் கொழுவிக் கொண்டு வீட்டுக்கு வந்தார். வந்ததும் வராததுமாக ஐயா எங்கே என்று என்னைப்பார்த்தார் வெளியில் போயிட்டார். இப்ப வந்திடுவார் உட்காருங்கோ என்றேன். எதையோ என்னோடு கதைக்க வேண்டும் என்டியள் சொல்லுங்கோ என்று உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

எதைச் சொல்லுவது என்று புரியாமல் மனம் படபடத்துக் கொண்டிருந்தது. அடுப்பறைக்கு ஓடிப்போய் கோப்பி தயாரித்துக் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்து விட்டு சிலருடைய வாழ்க்கையில் அவர்கள் நினைத்ததெல்லாம் நடக்கிறது. சிலருடையை வாழ்க்கையில் ஏன் அப்படி நடப்பதில்லை என்று அவரைக் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டு சொன்னார். கோயிலுக்குப் போய் கல்லைப்பார்த்து கடவுளே என்று கும்பிடு கிறோமே அது எப்படி அதுதான் நம்பிக்கை நம்பிக்கையினால் ஏற்படுகிற உணர்வு.

அது வீண்போகாது என்றார். உங்கள் பேச்சை நம்பலாமா என்று நான் கேட்டேன் ஓம் என்று தலையாட்டிய அவர் நான் இன்று ஊருக்குப்பயணம் இஞ்சத்தைய வேலை எல்லாம் முடிந்துவிட்டது என்றார். இனி வரமாட்டியளா என்று கேட்டேன் சந்தர்ப்பம் கிடைத்தால் வருவேன் என்றார் அவருடைய முகவரியைக் கேட்டு எழுதிக் கொண்டேன் அவரும் எங்கள் முகவரியை எழுதிக்கொண்டார். வெளியே போயிருந்த ஐயாவும் வந்து விட்டார். கொஞ்ச நேரம் ஐயாவும் அவரும் பேசிக் கொண்டிருந்து விட்டுப்புறப்பட ஆயத்தமானார்.நானும் அவருடன் வெளிப்படலைவரை வந்து இனி எப்போது வருவியள் என்று கேட்டேன் எதற்கும் நான்போய் கடிதம் போடுகிறேன் என்று சொல்லிட்டுப் போய் விட்டார்.



நான் கோயிலுக்குச் சென்றபோதெல்லாம் மனம் அவரைத் தேடிப்பார்க்கும் அதனல் கோயிலுக்குப் போவதும் குறைந்துவிட்டது. காலப்போக்கில் என் நிலையைக் கவனித்துவிட்டு ஏனம்மா ஒரு மாதிரியாக இருக்கிறாய் உனக்குள் என்ன கவலை என்று ஐயா கேட்டார்ர. அப்படி ஒன்றுமில்லை ஐயா நான் எப்போதும் போலத்தானே இருக்கிறேன் என்று வலிந்த சிரிப்போடு அவரைச் சமாளித்தேன். அதற்குமேல் ஒன்றும் கேட்காமல் ஆழமான சிந்தனையோடு தலை குனிந்தபடி இருந்தார் ஐயா. நான் கண்கலங்குவதை ஐயாவால் தாங்க்கிக் கொள்ளமுடியாது. நிரப்பப்படாத வெற்றிடம்போல் என் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. அதிக நாட்களாக தோழி வானதியையும் காணவில்லை. அவள் வந்தாலும் கதைத்துச் சிரித்துப் பொழுதைப் போக்கிவிடலாம். அன்றைக்கு மதியம் சந்தைக்குப் போய் வந்த ஐயா ஒரு புதிர் செய்தியோடு வந்தார் கௌரி உன்ற தோழி வானதி தருமனோடு ஓடிப்போய் விட்டாளாம் என்று என்னிடம் சொன்னார் "எங்க போ-னவையாம் அவளின்ற தாய் தகப்பன் தேடிப்பார்க இல்லையோ என்று ஐயாவைக் கேட்டேன்.

அவர்களோ குலம் கோத்திரம் பணம் பதவி பார்க்கிற ஆட்கள் தங்களின்ற காணியில மரம் சீவின முருகன்ற மகன்தான் கொண்டு போனவன் என்று நல்லாய்த் தெரிந்ததும் அவளை இனி வீட்டில் அண்டக்கூடாது என்று கைகழுவிப் போட்டினம் என்றார் ஐயா.

வானதியைப்பற்றி எண்ணிப்பார்த்தபோது எனக்கும் ஒரு ஆக்ரோசம் கிளம்பியது. வருவது வரட்டும் என்ற துணிவோடு என்மனநிலையை அவருக்கு உணர்த்தி ஒரு கடிதத்தை வரைந்து அவரக்கு அனுப்பினேன். ஒருவாரம் கழித்து அவரிடமிருந்து பதில் வந்தது தன்னை மறந்துவிடும்படியும் நான் கலியாணம் செய்துவிட்டேன் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். என்உள்ளம் எரிமலையாக வெடித்துக் குமுறியது. வந்தான் வரத்தானை நம்பக்கூடாது என்று என் அம்மா எச்சரித்தது என் நினைவுக்கு வந்தது. என்னோடு பேசித்திரிந்த கிளி என்னை விட்டுப் பறந்து விட்டது.

(உணர்வுகளை உரிய நேரங்களில் வெளிப்படுத்த வேண்டும் தவறுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் பாதகமான நிலையை எதிர்கொள்ள வேண்டும்)

"காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்."

## மனிதத்தைக் காதல் செய்வாய்

மனிதனை மனிதனாய்
மதிக்காத மனிதர்க்கு
விலை என்ன சொல்லுமனிதா?
இனிமை தமை மறுத்து
கற்பிதங்கள் சூட்டுபவர்
கசடனாய்க் கொள்க மனிதா?

மனிதத்தின் மாண்பினை
மாசாக்கிப் பணி செய்வோரை
மனிதனாய்க் கொள்ளலாமா?
மனிதனை மனிதனாய்
மதித்தறியா மடையர்க்கு
சிலை வைத்துப் பேணலாமா?

மனிதனை மனிதனாய்
மதிக்காத மனிதனை
மாமேதை என்பதழகா?
இனிதான கன்னலை
வேம் பொன்னுரைப்பது
கீழ்மையிலும் கேடல்லவா?

கற்சிலைக்கு ஆயிரமாய்
கற்பிதங்கள் செய்தாலும்
அற்புதங்கள் ஆங்தாமோ?
பொற்புடைய மனிதத்தை
மதிக்கத் தெரியாதோர்
மாக்களின் அணியாகுவார்.

மொழி வழி மாந்தரை
இழிவென்றுரைப்பதால்
மொழிவழி இனம் அழியும்
இழிவான மனங் கொண்டு
மனிதனைப் பகுப்போனை
கீழ்மகன் என்றுரைசெய்

சித்தம் இழந்தவன்
செயல்தன்னை மானுடம்
பைத்தியம் என்கின்றது.
மெத்தப் படித்தவன்
மேன்மை கொள்பண்பினால்
மேலவன் ஆக உயர்வான்.

மனிதத்தை நேசித்து
மனிதத்தை மாண்பு செய்
மானிடம் புவியிலோங்கும்
இனிதாரும் புவிவாழ்வு
என்நாளும் நினை வொளிர
பண்புடைமை ஆற்று மனிதா?

பணிவோடு கீழ்ப்படிவு
செவிமடுத்தல் என்பதனை
சிரமேற்றி உளமேற்றுவாய்
துணிவோடு பணிவாற்றி
துயரணுகா சுகம்காண
மனிதத்தைப் போற்றி எழுக!

அன்போடறம் பேணி
ஆளுமை செய்தே மனிதப்
பண்புதனை மேன்மை செய்தாய்
துன்பமே அனுகாது
இன்பமது தொடர்ந்து வரும்
மனிதத்தைப் பேணி நின்றால்.

கனி விட்டுக்காய் கொள்வோன்
காசு பணத்தால் மனித
வாழ்வினைக் காணமாட்டார்
மனிதத்தைப் பேணி வாழ்
மனிதமே தழைக்குமிங்கு
மனிதத்தைக் காதல் செய்வாய்.

- வளவை வளவன்

## கற்பனை செய்வாய்

வதனம் சரியில்லை
வானில் முகிலில்லை
சுனையில் நீரில்லை
சுத்தக் காற்றில்லை
சுதந்திர மூச்சில்லை
சுற்றிப் பார்க்க இடமும் இல்லை

பசுவில் பாலில்லை
பசுமை தான்இல்லை
பட்டமரம் கொண்ட
பாலைவனம் தான் உண்டு
பச்சை நிறமில்லை
பார்க்கவே சகிக்கவில்லை

பூவில் மணமில்லை
முகர மனம் இல்லை
நிலக்கீழ் நீரில்லை
நிலையான வாழ்வில்லை
உதவா கரம்போல
உவர் நீர்தான் உண்டு

ஊஞ்சல்போட மரமில்லை
ஊதி விளையாட இலையில்லை
புசிக்கக் கனியில்லை
பூஜிக்கப் பூவில்லை
கூடுகட்டக் கிளையில்லை
குருவிச்சத்தம் கேட்குதில்லை

மண்வாசம் வருகுதில்லை
வான்மழை பெய்யுதில்லை
சுகமான தென்றலில்லை
தூக்கம் வருகுதில்லை
இரவில் ஒளியில்லை
தீர்க்க வழியில்லை

களைப்பாற நீயில்லை
இளைப்பாற நிழலில்லை
தண்மையோ எங்குமில்லை
இதமான சுகமில்லை
கசிநாறாய்த் தெரிகிறதே
சொல்லி அழ யாருமில்லை

காரணம் ஏனோ? ? ?
சித்திப்பாய் மானிடா

மரமில்லை வனமில்லை
நீரில்லை நிலையில்லை
அதனால் வரமில்லை
வனம் இருந்த இடத்தில்
மதில் மாளிகைகள்
பசுமையாய் கண்டஇடம்
பாலைவனமாச்சா ?

சிந்திப்பாய் மானிடா
எல்லாம் உன்னாலே.....

-பள்ளியூர்ப் பாவனன்



## மனித மனச்சமநிலை

இறக்கைகள் இன்றி பறக்கவும்
சில்லுகள் இன்றி ஓடவும்
முடியுமானால் அது
பறவைகளால் அல்ல
இயந்திர உறுமல்களாலும்
அல்ல.
மனித மன சமனிலி
மாத்திரமே புரிய முடியும்
இச் சாதனை தன்னை

விரலுக்கேற்ற வீக்கமின்றி
மாயைகள் பலதில் மயங்கி
பெற்றவர் உற்றவர் மறந்து
அவர் தம் கடமை மறுத்து
நீதேடும் உலகம் தான்
எதுவோ.? எங்குண்டோ.?

நீவீர் மறப்பது
உறவுகளை மட்டும் அல்ல
உம்மையும் தான் என்பதை
ஏனோ உணரவில்லை.

முகநூலில் நண்பர் பலர்
இருந்திடலாம் உனக்கு
ஆனாலும் முக எதிரில்
உன் கைகோர்த்து
நடை பயில உறவுகள்
உன்னிடத்தில் உண்டோ?

வாழ்வதனை உணர்ந்திட
வாழ்வதனை கற்றிட
வாழ்வதனை நேசித்திட
மொத்தத்தில் வாழ்வின்
மொத்தத்தை வாழ்ந்திட

மண்ணாசை பொன்னாசை
பெண்ணாசை மீது
பேராசை பிடித்து
அலைவாது உன்
வாழ்வதனை அடக்கிவிடு
அடக்கிவிடு என்றும்
மனித மனசமநிலையில்!


அன்பு காதல்
தேசம் மொழி
உறவுகளை மறந்து
இவ்வுலகில் நீர்
தேடிச் தேடிச் சேர்க்கும்
அத்தனையும் உமது
எவ்வுகை வாழ்விற்கென
எப்போதாவது சிந்தனை
செய்தாயா முட்டாளே.

எட்டுமணி நேர வேலை
எட்டு மணி நேர தூக்கம்
மீதி எட்டு உன்
இன்பத்திற்காய்
பகிர்ந்ததை மறந்து

மனித மன சமத்துவம்
தளம்பி தள்ளாடி
எழும்பி நடக்க நீ
முயலும் வேளையில்
வீழ்ந்து விழுந்து
உன் பயணம் எங்கே
தான் செல்கின்றது.

- வராகினி

# கவனம் கொடுத்துதீர்க்கப்படவேண்டிய இலங்கைகல்விமுறையின் மையப்பிரச்சனைகள்



இலங்கையின் கல்வி முறைமை என்பது (Educational System of SriLanka ) பல்லாண்டு கால வரலாற்றுத் தொடர்ச்சியையும் காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்ட கருதத்தக்க பல மறு சீரமைப்புக்களையும் (Reforms) கொண்ட ஒரு முறைமையாகும். காலணித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை தன்னை விடுவித்துக் கொண்டு முடியாட்சித் தத்துவத்தில் இருந்து குடியாட்சித் தத்துவத்துக்கு மாற்றம் பெற்றபோது ஒரு ஜனநாயக நாட்டுக்குரிய பண்பியல் குணாம் சங்களுடன் தன் பல்வேறு துறைகளிலும் கவனத்தை செலுத்தி புதிய பல மாற்றங்களை கொண்டுவந்தது.

அவ்வாறு அதிக கவனம் கொடுக்கப்பட்ட துறைகளில் கல்வித் துறை மிக முக்கியமானதாகும். குறிப்பாக இலவசக் கல்வி (Free Education) முறைமை ஏற்படுத்தப்பட்டமை அவ்வாறான கவனம் கொடுப்பினால் விளைந்த விளைவு எனக் கருதமுடியும். இருந்தும் இலவசக் கல்வி முறை என்பது இலங்கையின் தனித்துவமாகவிருந்தபோதும் சில சந்தர்ப்பங்களில் அதுவே தலையிடியாகவும் அமைந்து விடுகின்றது. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அதிலும் மெத்தனப்போக்கில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பாடசாலைக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழக கல்வி வரை இலவசக் கல்வியை எந்தவிதமான பாரபட்சமுமின்றி அத்தனை குடிமக்களுக்கும் வழங்குவது என்பது சாதாரணமானதொரு விடையமல்ல மிகப்பெரும் சவாலான விடையமாகும்.

கல்விக்கான செலவீனம் என்பது அரசின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான செல்வாக்கை செலுத்தும் போதும் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுமளவுக்கு இலங்கையின் கல்விக்கான செலவீனம் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக சதவீதத்தைக் கொண்டிருப்பதில்லை. இருந்தும் பல்வேறு வெளி நிதி மூலங்களின் மூலம் இலங்கை தனது கல்விக்கான செலவீனங்களைச் சமாளித்துக்கொள்வது வழமையானதொன்று. குறிப்பாக உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடனுதவி மற்றும் நன்கொடைகள் இலங்கையின் கல்விச் செலவில் கணிசமான பங்களிப்பைக் கொண்டுள்ளன. இதனை இங்கு குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. அதாவது இலங்கைக்கு கல்விக்கான கடனுதவியை வழங்கும் போது இவ் உலக நிறுவனங்கள் நிதியுடன் சேர்ந்து சில நிபந்தனைகளையும் இலங்கைக்கு வழங்குகின்றன.

இந் நிபந்தனைகளுக்கு கட்டுப்படும் பட்சத்திலேயே நிதியுதவியை வழங்க அவ் உலக நிறுவனங்கள் தயாராகவுள்ளன. இவ் நிபந்தனைகளுக்கு இலங்கை கட்டுப்படும் போது தவிர்க்க முடியாது கல்வி முறைமையில் சில நீக்கல்களையும் சில சேர்க்கைகளையும் செய்ய வேண்டியுள்ளது. அதனால் இலங்கையின் கல்வி முறைமையில் இலங்கையின் கால வர்த்த பரிமாண வகுப்புக்களுக்கு உட்படாத அவசியமற்ற பல விடயங்கள் இருப்பதாகவும் இலங்கை கல்வி முறைமை இலங்கைக்கு தனித்துவமற்று ஏனைய நாடுகளின் சாயலையும் நிழலையும் கொண்டிருப்பதான குற்றச்சாட்டுக்கள் பரவலாகவுள்ளமை குறிப் பிடத்தக்க விடயமாகும். இக் குற்றச்சாட்டுக்கள் இலகுவில் கடந்து போகக்கூடிய வையுமல்ல.

இவ்வாறான குற்றசாட்டுக்கள் மீதான கவனத்தின் அடிப்படையிலும் இலங்கை கல்வி முறைமை மீதான தொடர் அவதானத்தின் அடிப்படையிலும் இலங்கையின் கல்விமுறைமையில் அவதானிக்கத் தக்க மையப்பிரச்சனைகளை பின்வரும் மூன்று வகைப்பாடுகளுக்குள் பட்டியலிடமுடியும்.

1. முன்பள்ளிக் கல்வி முறைமையில் உள்ள பிரச்சனைகள்
2. பாடசாலைக் கல்வி முறைமையில் உள்ள பிரச்சனைகள்
3. உயர் கல்வி முறைமையில் உள்ள பிரச்சனைகள்

<u>முன்பள்ளிக் கல்வி முறைமையில் உள்ள பிரச்சனைகள்</u>

1. முன்பள்ளிக் கட்டமைப்புக்களில் 80% மானவை அரசின் கட்டுப்பாட்டுக்குள் அமையாத கட்டமைப்புக்களாகவுள்ளன
2. முன்பள்ளிகளுக்கு என அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான கலைத் திட்ட மற்றும் பாடத்திட்ட நடைமுறைகள் கிடையாது.
3. முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகுறித்த எந்த விதமான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களும் கிடையாது
4. தனியாரும் இலகுவான அனுமதி முறைகளுக்கூடாக முன்பள்ளிகளை நடாத்தக்கூடியதாகவிருத்தல்
5. முன்பள்ளிகளின் பரிபாலனத்துக்கும் மேம்பாட்டுக்கும் அரசினால் எந்த விதமான நிதிகளும் நேரடியாக ஒதுக்கப்படாத நிலைமை
6. முன்பள்ளிகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான வயதெல்லை குறித்த எந்த வரையறைகளும் கிடையாது.
7. முன்பள்ளிகளின் பரிபாலனத்தை கண்காணிப்புச் செய்வதற்கான நிர்வாக மற்றும் சட்ட பொறிமுறைகளின் தன்மை போதுமானதாகவில்லை.

<u>பாடசாலைக் கல்வி முறைமையில் உள்ள பிரச்சனைகள்</u>

1. தேசியப் பாடசாலைகள் மாகாணப் பாடசாலைகள் என அரச பாடசாலைகள் இருவகைப்படுத்தப்பட்டுள்ளமையும் அவற்றுக்கான நிர்வாக கட்டமைப்பு முறை மற்றும் வள ஒதுக்கீட்டு முறையில் பாரிய வேறுபாடுகளும் பாரபட்சங்களும் காணப்படுகின்றமை

2. ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு சக பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவிருத்தல்

3. ஆசிரியர்களிடமிருந்து நேரடிக் கற்பித்தலுக்கு அப்பால் எதிர்பார்க்கப்படும் பல்வேறு விதமான பதிவு நடைமுறைகளினால் அதிகரித்திருக்கும் ஆசிரியர்களின் வேலைச் சுமை

4. பாடசாலை கல்வி நாட்காட்டி (SchoolAcademicCalender) அதிக விடுமுறைகளைக் கொண்டதாகவிருத்தல்

5. தேசிய அளவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் பாடசாலைகளின் பௌதிக மற்றும் மனித வளத்தை கருத்தில் கொள்ளாது சமாந்தரமாக அனைத்துப் பாடசாலைகளிலும் அமுல்படுத்தப்படல்

6. பாடத்திட்டங்களும் கலைத்திட்டங்களும் குறுகிய கால இடைவெளியில் மறுசீரமைக்கப்படல்

7. தாய்மொழி மற்றும் ஆங்கில மொழி மூலம் என கலப்பு மொழி மூலக் கல்விமுறைமை காணப்படல்

8. ஆசிரிய வாண்மை விருத்திக்கான ஊக்குவிப்புக்கள் குறைவாகவிருத்தல் குறிப்பாக முதுமாணிப் பட்டங்களைப் பயில்வதற்கான கற்கைநெறிக் கட்டணம் இதர பல அரசாங்கப் பணியாட் தொகுதியினருக்கு அரசினாலேயே செலுத்தப்படும் போதும் ஆசிரியர்கள் தமது சொந்த நிதியிலேயே கற்க வேண்டியுள்ளது.

9. ஆசிரியர் ஆட்சேர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் பின்பற்றப்படல் ( பட்டதாரிகள் நியமனம், தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கூடாக வெளியேறும் கல்வி டிப்ளோமாதாரிகள் நியமனம், ஆசிரிய கலாசாலைகளுக்கூடான பயிற்றப்பட்ட ஆசிரியர் நியமனம், தொண்டர் ஆசிரியர் நியமனம், ஆசிரிய உதவியாளர் நியமனம்)

10. தொழிற்கல்விக்கும் வாழ்க்கைத் திறன் விருத்திக்கான கல்விக்குமான முக்கியத்துவம் ஒப்பீட்டளவில் குறைவாகவிருத்தல்

11. புதிதாக பாடசாலை மட்டத்தில் அறிமுகப்படுத்தப்படும் கலைத்திட்டங்களைக் கற்பிக்க பொருத்தமான ஆசிரிய ஆளணி இல்லாமையும் ஏற்கனவேயுள்ள ஆசிரிய ஆளணி போதியளவு பயிற்றுவிக்கப்படாமையும் அத்துடன் ஆசிரிய வளப்பங்கீடு சமச்சீரற்று காணப்படலும்

12. பாடபுத்தகங்களில் காணப்படும் கருத்துப் பிழைகள் பொருட்பிழைகள் எழுத்துப் பிழைகள் மொழிபெயர்ப்புத் தவறினால் ஏற்படும் பிழைகள் குறிப்பாக கலைச்சொல்லாக்கத் தவறுகள் நீண்ட காலமாக திருத்தப்படாத நிலைமை தொடர்ந்து வருதல்.

<u>உயர் கல்விமுறைமையில் உள்ளபிரச்சனைகள்</u>

1. பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் கற்கைகளில் பலவேலைவாய்ப்புச் சந்தையின் தேவைகளை பூர்த்திசெய்யத்தக்கதாக இல்லாமையும் இதனால் பட்டதாரிகள் வேலையற்ற பட்டதாரிகள் எனும் நிலையை அடைதலும் (அட்டவணை 2 )

2. பல்கலைக்கழகங்களில் இருந்துவெளியேறும் அனேகமானபட்டதாரிகள் அரசவேலையொன்றையே எதிர்பார்க்கும் மனநிலையில் இருத்தல்.

3. பல்கலைக்கழக அனுமதிக்காக பின்பற்றப்படும் வெட்டுப்புள்ளி முறைமையில் மாவட்ட நிலைமட்டுமே கருத்தில் எடுக்கப்படுதல் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கடல்கடந்த தீவுகள் ஆன நெடுந்தீவு எழுவைதீவு அனலைதீவு போன்ற இடங்களில் கல்விக்கான வசதிவாய்ப்புக்கள் குறைவான இடங்களில் வதியும் பிள்ளைகளும் யாழ்ப்பாண மாவட்ட வெட்டுப்புள்ளியின் கீழ் கருத்தில் எடுக்கப்படுதலும். அவர்களை விட வசதி வாய்ப்புக்கள் கூடிய கிளிநொச்சி, வவுனியா போன்ற இடத்து மாணவர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுதலும்

4. பல்கலைக்கழக அனுமதிக்காக சில கற்கைநெறிகளுக்கு அக் கற்கைநெறிகளைவழங்கும் பல்கலைக்கழகங்களால் தனிப்பட்ட நுண்மதிப் பரீட்சைகள் டாத்தப்பட்டு அதனடிப்படையில் தெரிவு இடம்பெறுதல். இப் பரீட்சைகள் பெரும்பாலானவை ஆங்கிலமொழி மூலமானதாக அமைவதால் ஆங்கிலப்புலமையின்மை காரணமாக பெரும்பாலான மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவதும் பல்கலைக்கழகங்களே நேரடியாக இப் பரீட்சை தொடர்பான அத்தனை விடயங்களையும் கையாள்வதால் மாணவர்களிடையே பாரபட்சம் காட்டுவதற்கான ஏதுக்கள் காணப்படுதலும்.

5. பல்கலைக்கழகங்கள் சிலவற்றால் வழங்கப்படும் சில பெறுமதி வாய்ந்தகற்கைநெறிகளுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவம் மூலமாக விண்ணப்பித்து அனுமதிபெறமுடியாத நிலைமை உதாரணம் கொழும்பு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் கல்வியியல் மாணிபட்டக்கற்கைக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியாதிருத்தல்.

6. கல்வியியல் கல்லூரிகளுக்கான அனுமதிக்கு கடுமையான நிபந்தனைகள் பின்பற்றப்படல்

7. கட்டுப்பாடற்றநிலையில் வெளிவாரிப்பட்டக்கற்கைகள் வழங்கப்படுதலும் அவற்றுள் பெரும்பாலான பட்டக்கற்கைகள் வெறுமனே பட்டம் எனும் நிலையில் மட்டுமேயிருத்தலும். அதாவது தொழிற்சந்தையின் தேவைக்கேற்ற வெளிவாரிப்பட்டக்கற்கைகள் மிகவும் குறைவாகவிருத்தல். அனேகமான வெளிவாரிப் பட்டக்கற்கைகள் கலைத்துறைப் பட்டக்கற்கைகளாகவேயுள்ளன.

8. உயர்தரப்பரீட்சையில் ஒரு கட்டாய நிபந்தனையாகக் கருதப்படும் பொது விவேகப் பரீட்சையில் அதிகபுள்ளிகளைப் பெற்றுச் சித்திபெறும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலான பல்கலைக்கழக அனுமதிக் கட்டமைப்பு காணப்படாமை.

9. தனியார் பல்கலைக்கழகங்களை தாபிப்பதில் தடங்கல்களாகவுள்ள சமூக எதிர்ப்புணர்வு

10. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களினதும் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களினதும் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் உயர்கல்விக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக விருத்தல் (அட்டவணை)

## முடிவு

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு விடயங்களும் தனித்தனியாக ஆழமாக ஆராயப்படவேண்டியவை. கல்விசார் பரப்பில் கொள்கைவகுப்புக்களில் செய்யப்பட வேண்டியசிலஅவசியவிடயங்கள் தொடர்பானகருத்தேற்றங்களை ஆரம்ப நிலைமட்டத்தில் உருவாக்கவேண்டும் எனும் நோக்கிலேயே இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்விமுறைமையில் அதிகம் கவனம் கொடுக்கப்பட வேண்டியவையாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சனைகளுடன் மேலும் பல மையப்பிரச்சனைகளை அடையாளம் காட்ட முடியும். அவை ஒவ்வொன்று தொடர்பிலும் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றின் வழி பலசெயற்றிட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை பல்வேறு பரப்புக்களின் மீதான நிகழ்ச்சித் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

அதன் மூலம் இலங்கையின் கல்வித் துறையை முன்னேற்றகரமான பாதை ஒன்றை நோக்கி நகர்த்த முடிவதுடன் கல்விசெயற்பாடுகளின் வெளியீடுகளாக அமையும் மாணவர்களை எதிர்கால உலகின் சவால்களுக்கு ஏற்ற விதத்தில் தயார்ப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

இ. சர்வேஸ்வரா
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அட்டவணை 1- பல்கலைக்கழக அனுமதி

| ஆண்டு | உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோர் | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் சதவீதம் | பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் | பல்கலைக்கழக அனுமதிபெற்றோர் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2013 | 241,626 | 143,740 | 59.48 | 25,200 | 17.53 |
| 2014 | 247,376 | 149,572 | 60.46 | 25,643 | 17.14 |
| 2015 | 255,191 | 155,550 | 60.95 | 29,055 | 18.68 |
| 2016 | 258,193 | 160,517 | 62.16 | 30,662 | 19.10 |
| 2017 | 258,330 | 163,104 | 64.38 | 30,513 | 18.70 |

Source: University Grants Commission

# ஆக்கபூர்வமாக சிந்தியுங்கள்

1. நீங்கள் மகிழ்ச்சியானவராக இருக்க விரும்புகிறீர்களா? நீங்கள் செய்ய வேண்டிய செயல் உங்களை நீங்களே நேசிக்கத் தொடங்குங்கள். அழகோ அழகில்லையோ நீங்கள் உங்களை ரசியுங்கள், அழகு ஓர் உணர்வே.

2. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மற்றவர்களையும் வெற்றிபெறச் செய்யுங்கள். உங்களுக்கான வெற்றி உங்களைத் தேடி வரும்.

3. கடந்த கால தோல்விகள் பயமுறுத்துமானால், நிகழ்காலமும் வருங்காலமும் தோல்வியாகிவிடும். அதனால், கடந்த காலத்தோல்விகளை வெல்ல வேண்டும். புண்பட நேரும்போது பொறுமையுடன் இருங்கள். தகுந்த நேரத்தில் உணர்வுகளை, அமைதியாக புரியும்படி வெளிப்படுத்தி அதை சரிப்படுத்துங்கள்.

4. பணத்திற்காக, இலாபத்திற்காகப் பழகுபவர்கள் நல்ல நண்பர்களாக இருக்க முடியாது. அவர்களை விட்டு அவர்களுக்குத் தெரியாமலே விலகி விடுங்கள். நம் மனதில் உள்ள குற்ற உணர்வுகள் நம்முடைய மகிழ்ச்சியைப் பாதிக்கும். நாம் செய்துவிட்ட குற்றங்களுக்காக மனம் வருந்திப்பயனில்லை. அதிலிருந்து மீள முயற்சி செய்யுங்கள்.

5. கவலைகள் நம்முடைய உடலில் நோய்களை மட்டும் உருவாக்குவதில்லை. நமது வயதையும் அதிகப்படுத்திக்காட்டுகிறது. ஆணவம் மிக்க மனிதனே பல இடங்களில் அடிமைப்பட்டுப்போகிறான்.

6. உங்களைப் பற்றி உண்மை இல்லாத ஒன்றை யாராவது கூறினால், அதற்காக கோபப்படாதீர்கள். ஒருவேளை அது உண்மையானதாக இருப்பின், உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்.

7. கருத்துவேறுபாடு ஏற்பட்டுவிட்டால், அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டுமென காத்திருக்காமல், நீங்களே முதலில் சென்று பேச்சைத் தொடங்குங்கள். நீங்கள் கூறுவது சரியாக இருந்தாலும் அதற்காக மற்றவர்களிடம் வாதாடாதீர்கள். விவாதத்தை வெல்ல சிறந்த வழி அதைத் தவிர்ப்பதுதான்.

# புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2019



## தரம் - 05

பெயர்: ..............................  நேரம் : 25 நிமிடம்

### வினாத்தாள் I



ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01) மிகவும் குறைந்த தொடர்புள்ள உருச் சோடியைத் தெரிவு செய்க


1) 
2) 
3) 




02) 1) 
2) 
3) 

03) தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று வேறுபட்டது. அதன் கீழ்க் கோடிடுக.

1) 
2) 
3) 

04) இவ்வுருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் முறை



1) 
2) 
3) 


**பின்வரும் சொற்கூட்டங்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

05) வெயில் - மழை - பாதுகாப்பு

1) 
2) 
3) 



06) வாசிப்பு - தகவல் - ஊடகம்

1) 
2) 

3) 

S. KAV. RL ஐ பெறுமதியாக ரூ. 475.80 எனக் காட்டலாம் எனின்


07) ரூ. 584. 70 ஐ எவ்வாறு காட்டலாம்?


1) S. VKR. AL  2) S. VRK. AL  3) S. VAL. AK


08) S. RAVK. KV இனால் காட்டப்படுவது யாது?

1) ரூ. 8754. 45  2) ரூ 5407. 75  3) ரூ 7854. 54

**9ஆம் 10 ஆம் வினாக்களில் தரப்பட்ட கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

09) 






1) 8  2) 10  3) 12

10) 2, 42, 642, ..................

1) 2648  2) 8264  3) 8642

11) எழுத்தாளன்: எழுதுகோல் எனின் உழவன் .......................................... ஆகும்.

1) வயல்  2) கலப்பை  3) மாடு

12) வைத்தியல்: நோயாளி எனின் ஆசிரியர்: ........................................ ஆகும்.

1) மாணவன்  2) பாடசாலை  3) வகுப்பறை

13) "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" எனும் பழமொழியின் கருத்து

1) உண்மை பேசுதல்  2) காலம் தவறேல்  3) அவசரப் புத்தி


14) தென்னையின் பிஞ்சு குரும்பை போல மாவின் பிஞ்சு

1) மூசு  2) கச்சல்  3) வடு


15) ஆட்டின் மலம் பிழுக்கை போல யானையின் மலம்


1) எச்சலம்  2) சாணம்  3) இலத்தி

16) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு வட்ட வடிவ கடதாசி நான்காக மடித்து துறையிடப்பட்டது.



இதனை விரிக்கும் போது காணப்படும் வடிவம்





17) 


இலக்கம் 1 இற்கு எதிர்ப்பக்கத்தில் முக்கோணிகளை இருக்கும் இலக்கம்

1) 6 2) 5 3) 3


18) தரப்பட்ட உருவில் எத்தனை முக்கோணிகளை அவதானிக்கலாம்.



1) 7
2) 8
3) 4

19) சதுரவடிவக் காணி ஒன்றின் ஒரு பக்க நீளம் 16 m அதன் எல்லை வழியே 2m சம இடைவெளியில் தூண்கள் இடப்பட்டன. அங்குள்ள தூண்களின் மொத்த எண்ணிக்கை.

1) 30 2) 28 3) 32

20) 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி நிழற்றிய பகுதியைப் போல் எத்தனை மடங்காகும்.

1) 4 2) 5 3) 6

**வினாத்தாள் I விடைகள்**

| | |
|---|---|
| 1) 1 | 11) 2 |
| 2) 3 | 12) 1 |
| 3) 1 | 13) 2 |
| 4) 2 | 14) 3 |
| 5) 3 | 15) 3 |
| 6) 2 | 16) 1 |
| 7) 2 | 17) 1 |
| 8) 1 | 18) 2 |
| 9) 1 | 19) 3 |
| 10) 3 | 20) 1 |

திருமதி கஜலஷ்மி சயந்தரூபன்
ஆசிரியை:- யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் (தேசியபாடசாலை)



# பொது விவேக போட்டிப் பரீட்சை

1ம் 2ம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரு வெற்றிடங்களை உடைய ஒரு வாக்கியம் தரப்பட்டுள்ளது. அவ்வாக்கியம் கருத்துள்ளதாக இருப்பதற்கு இரு வெற்றிடங்களுக்கும் உகந்த சோடி சொற்கள் முறையே இடம்பெறும் விடையை கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் இருந்தும் தெரிந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. கல்வியின் ............................. வெறுமனே அறிவினால் மாத்திரம் மூளையை நிரப்பி உள்ளவர்களை உருவாக்குதல் அன்றி நாட்டின் ........................... பங்களிப்பு செய்யத்தக்க சமநிலைப்பட்ட ஆளுமை உள்ள பிசைகளை உருவாக்குதலாகும்.
(1) நோக்கம், வளர்ச்சிக்கு (2) விளைவு, மேம்பாட்டிற்கு
(3) குறிக்கோள், அபிவிருத்திக்கு (4) கருத்து, நிலைத்து நிற்கைக்கு (........)

2. எமது நாட்டின் இளைஞர்களிடையே சுயகௌரவம், சுய விளக்கம், தன்னடக்கம் என்னும் உத்தம குணங்களை எனது நாட்டின் ஆசிரியர்களின் பெரிய ........................ ஆகும்.
(1) வளர்த்தல், பணி (2) வளர்த்தல், கடமை
(3) அபிவிருத்தி செய்தல், பொறுப்பு (4) அகற்றல், பொறுப்பு (........)

3ம் 4ம் வினாக்களில் ஒரு முடிவும் I,II,III என இலக்கமிடப்பட்ட மூன்று தகவல் தொகுதிகளும் தரப்பட்டுள்ளன. அம்மூன்று தகவல் தொகுதிகளில் ஒன்றை மாத்திரம் பயன்படுத்தி முடிவை செய்யலாம் எனின் Aஐத் தெரிந்தெடுக்க.

I,II ஆகியவற்றை ஒருமிக்க பயன்படுத்தி முடிவைச் செய்யலாம் எனின் B ஐத் தெரிந்தெடுக்க.
I,III ஆகியவற்றை ஒருமிக்க பயன்படுத்தி முடிவைச் செய்யலாம் எனின் C ஐத் தெரிந்தெடுக்க.
II,III ஆகியவற்றை ஒருமிக்க பயன்படுத்தி முடிவைச் செய்யலாம் எனின் D ஐத் தெரிந்தெடுக்க.
I,II,IIII ஆகியவற்றை ஒருமிக்க பயன்படுத்தி முடிவைச் செய்யலாம் எனின் E ஐத் தெரிந்தெடுக்க.

3. முடிவு : 2018 ஓகஸ்ற் க.பொ.த (உ.த) பரீட்சையில் தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானத்திற்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை உயிர் முறைமைகள் தொழினுட்பவியலுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடியதாகும்.
I. பொறியியல் தொழினுட்பவியலுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைந்ததாகும்.
II. உயிர் முறைமைகள் தொழினுட்பவியலுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை பொறியியல் தொழினுட்பவியலுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைந்ததாகும்.
III. தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானத்திற்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை பொறியியல் தொழினுட்பவியலுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடியதாகும்.
1) A (2) B (3) C (4) D (.......)


4. முடிவு : தனியார் போக்குவரத்து சேவை அரச பேருந்து போக்குவரத்து சேவையை குறை நிரப்புகின்றது.
I. தனியார் பேருந்து சேவை இலாபகரமற்ற பேருந்து பாதைகளை உள்ளடக்கவில்லை.
II. அரச பேருந்து போக்குவரத்து சேவையில் கிடைக்கத்தக்க பேருந்துகளின் எண்ணிக்கை பயணிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு போதியதன்று.
III. அரசாங்கம் பேருந்து கட்டணங்கள், பேருந்து ஓட்ட நேர சூசிகள் என்பன தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் அவ்வப்போது உடன்பாடுகளுக்கு வருகின்றது.
(1) B (2) C (3) D (4) E (.......)

5ம் 6ம் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையை கண்டுபிடித்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
பவானியிடம் 8 நூல்கள் உள்ளன. அவை A,B,C,D,E,F,G,H எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றை பற்றிய சில தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| நூலின் பெயர் | A | B | C | D | E | F | G | H |
|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல்கள் | அ | ஆ | அ | இ | ஆ | அ | ஈ | ஈ |
| | உ | ஊ | உ | உ | ஊ | ஊ | உ | ஊ |
| | எ | ஏ | ஏ | எ | ஏ | எ | ஏ | எ |
| | ஒ | ஒ | ஓ | ஓ | ஒ | ஓ | ஒ | ஓ |

தொடரும்

# நீரிழிவிலிருந்து நம்மை காப்போம்



**சித்த வைத்தியம்**

நீரிழிவு என்பது அன்றே சித்தர்களால்
"மதுமேகம்" என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

"கோதையர் களலின் போதை
கொழுத்த மீனிறைச்சி போதை
பாலுடன் நெய்யும்
பரிவுடன் உண்பீராகில்
வருமே பிணி"

என்று சித்தர்கள் மது மேகம் வரும்வழியை குறிப்பிடுகின்றார்கள்.
"இன்று வீதிக்கு ஒருவர் என்ற நிலைமாறி இப்போது வீட்டுக்கு ஒருவர் இந்து மதுமேக நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதில்

இரண்டு விதமான நீரிழிவு. நோய்கள் முக்கியமானதாக காணப்படுகின்றன.


i) வகை I
ii) வகை II

இந்த இரண்டாம் வகைதான் பெரும்பாலும் எல்லாருக்கும் உண்டாகிறது. உடல் எடை அதிகரிப்பும், உணவுப்பழக்கத்தின் மாற்றங்களும் வேகமான மன அழுத்தத்தை தரக்கூடியதுமான வாழ்க்கை முறைகளும் தான் இந்த மதுமேகம் என்னும் நோய்க்கான மூலகாரணம் என்றால் நம்புவீர்களா?

அதிக நார்ச்சத்துள்ள காய்கறி வகைகள் அதிகமாகவும் "காபோவைதரேட்டு" உள்ள உணவுகள் குறைவாகவும் எடுத்து கொள்வதன் மூலமாகவும் அதிககாலம் பதப்படுத்தப்பட்ட உணவுகள் விரைவு உணவுகள் (fast food), குளிர்பானங்கள் பியர், நொருக்கு தீனி என்பவற்றை தவிர்ப்பதன் மூலமாகவும் இந்த மது மேகத்தை கட்டுக்குள் வைத்திருக்கலாம்.

புரத தேவைக்காக மீன் / முட்டை. பயறு சோயா கௌப்பி போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாா்.

பழங்கள் உணவின் பின்பு எடுத்து கொள்வது நல்லது தான் ஆனால் நன்கு கனிந்த பழங்களில் அதிகளவான Glucose காணப்படுவதனால் இளங்காயாக உண்பது நல்லது.




## உடற்பயிற்சி

உடற்பயிற்சி உடல் நலத்திற்கு மிகவும் அத்தியாவசியமானது. உடல் எடையை கட்டுக்குள் வைத்திருப்பதுடன் இரத்தத்தில் சீனியின் அளவையும் கட்டுப்படுத்துகின்றது.

1) தினசரி நடவடிக்கைகளில் மாற்றங்களை உண்டாக்குவதன் மூலம் இதனை இலகுவாக செய்யலாம்.

## இதில் ஒரு நன்மையும் இருக்கின்றது

என்னவென்றால் எமது அன்றாட நடவடிக்கைகளில் மாற்றத்தை கொண்டு வருவதன் மூலம் இந்நோய் ஏற்படுவதை தடுக்கவும் முடியும்

ஆனால் இந்த நோயில் இருந்து மீளமுடியும். என்ற நம்பிக்கையை இழந்துவிட்டு எப்போதும் மருத்துவர்களையும் மருந்துகளையும் தேடி ஓடக்கூடிய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றோம்.

இதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்தால் எவ்வளவோ பாரம்பரியமான உணவு பொருட்கள் இந்த நோயை கட்டுப்படுத்தக்கூடிய தன்மையில் இருந்தாலும் அந்த உணவை எடுக்க நேரமும் ஆர்வமும் இல்லை என்றே கூறவேண்டும்.

சரி இதனை எப்படி தடுக்கலாம்

1) உணவு
2) உடற்பயிற்சி
3) மருந்துகள்

## உணவு

"உணவே மருந்து" என்ற பழமொழிக்கமைவாக உணவுகளை அடையாளப்படுத்தி, தேர்ந்தெடுத்து உண்ணும் பேது இந்த மதுமேக நோயை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இயலுமானதாக இருக்கும்.

## வெந்தயம்

சர்க்கரை நோயை பிரதானமாக கட்டுப்படுத்தக்கூடிய தன்மை வெந்தயத்திற்கு உண்டு. வெந்தயத்தைப் பிரித்தால் வெந்த + அயம். வெந்த என்றால் பஸ்பமாகி விட்டது. என்று அர்த்தம். அயம் என்றால் இரும்பு என்று பொருள். இரும்பை பஸ்பமாக்கக்கூடிய ஒரு பொருள் அது என்றால், அது வெந்தயம் தான். தொடர்ந்து வெந்தயத்தை வறுதது வைத்துக்கொண்டு, தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே வந்தால் கூட நீரிழிவு நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தலாம்.

## வாழைப்பூ

நீரிழிவு நோயாளி ஒருவர் வாழைப்பூவை கசாயம் செய்து சாப்பிட்டார் என்றால் கண்டிப்பாக நீரிழிவு கட்டுப்படும். இதே வாழைப்பூவுடன், சிறிது காய்ந்த மிளகாய் எல்லாம் சேர்த்து அரைத்து துவையல் மாதிரி செய்து தொடர்ந்து சாப்பிட்டு வரும் பொழுது சர்க்கரை நோய் கட்டுப்படும்.

## தென்னைமரப்பூ

தென்னம்பாலைக்குள் இருக்கும் தென்னை மரத்துப் பூவை நன்றாகக் காயவைத்து, அதைப் பொடி செய்து காலையிலும், இரவிலும் தொடர்ந்து சாப்பிட்டு வந்தோம் என்றால் சர்க்கரை நோய் கட்டுப்படுவதுடன் சர்க்கரை நோயால் தளர்ந்து போன நரம்புகள் அனைத்தும் சரியாகிவிடும். இதனால் நம் கண்பார்வையும் தெளிவாக இருக்கும்.

நீரிழிவால் நரம்பு பாதிக்கப்படுவதால் கண்ணில் வரக்கூடிய நோய்கள் நிறைய வரும். அதே போல் நம் பாதங்களிலும் பல நோய் வரும். இவை அனைத்தையும் சரி செய்யக் கூடிய தன்மை தென்னம்பாலைக்குள் உள்ள தென்னைமரத்துப் பூவுக்கு உண்டு.

## நெல்லி, கடுக்காய், தான்றிக்காய் (திரிபலா)

அதுபோல் நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் இதையும் சம அளவி கலந்து வைத்துத் தொடர்ந்து திரிபலா என்கிற சூரணத்தையும் சாப்பிடும் பொழுது நீரிழிவு முழுமையாக கட்டுப்படக்கூடிய ஒரு வாய்ப்பு உண்டு. அதே போல் இந்த சர்க்கரை நோய்க்கு என்ன செய்யலாம் என்றால், சமையலில் சீரகத்திற்குப் பதிலாக அல்லது சீரகத்துடன் கருஞ்சீரகத்தையும் சேர்த்து சமையல் செய்யும் போது சர்க்கரை நோய்க்கு அற்புதமான மருந்தாக இருக்கும்.

தொடரும்....

வைத்தியர் ராஜ்மோகன் மனோராஜ்
BSMS (SL)



# குழந்தையும் நீங்களும்



## குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்களிப்பு

### குழந்தைகளை மென்மையாக கையாளுங்கள்

சமீபத்தில் என் நண்பர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அவருடைய மூன்று வயது குழந்தை, குளிர்சாதனப்பெட்டியிலிருந்து இரண்டு லீட்டர் குளிர்பான போத்தலை எடுக்க முயன்ற போது கை தவறி கீழே விழுந்து, அதிலிருந்த குளிர்பானம் முழுவதும் கொட்டிவிட்டது. நண்பரின் மனைவி, தன் குழந்தையை கண்டித்து, அடிக்கப்போகிறார் என்று நினைத்து, பயந்துக்கொண்டிருந்தேன். ஆனால் நடந்ததோ வேறு.

"பாரத்தை தூக்குவதற்கு அப்படித்தான் முயற்சி செய்யணும். கொட்டினது பரவாயில்லை, அதில் கொஞ்ச நேரம் உன் இஷ்டத்திற்கு விளையாடிக்கொள்" என்றார். குழந்தையும் அதில் கைகளை அலசி விளையாட ஆரம்பித்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, "இதை கொட்டியது யாரோ, அவர்கள் தான் துடைக்க வேண்டும். இந்த சின்ன துணியால் கவனமாக துடைத்துவிடு" என்று, குழந்தையிடம் துணியை கொடுத்தாள். தன்னிடம் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்ட பெருமை முகத்தில் ததும்ப, அந்த குழந்தை தரையை சுத்தமாக துடைத்த பின், பெருமிதத்துடன் அம்மாவைப் பார்த்தது. அதன் பிறகு "இதே போத்தலில் குழாயிலிருந்து தண்ணீர் பிடித்து, கொட்டாமல் கொண்டு சென்று வைக்க இப்போதே பழகிக்கொள்" என்று சொல்லி, குழந்தையை குழாயின் அருகில் அழைத்துப் போனார்.

அந்த தாயை நான் ஆச்சரியத்துடன் பார்த்தேன். "குழந்தைகளை வளர்க்கும் முறைகளை விளக்கும் ஒரு புத்தகத்தில் படித்ததை, நான் நடைமுறையில் பயன்படுத்துகிறேன். இந்த முறைகளை பின்பற்றுவதால் குழந்தை தான் செய்த தவறை உணர்கிறது. தவறு செய்தால், துடைப்பது போன்ற தண்டனையை தான் அனுபவிக்க வேண்டும் என்று மென்மையாக குழந்தைக்கு உணர வைக்க முடிகிறது. மீண்டும் அதே தவறை செய்யாமலிருக்க, பெற்றோராகிய நாம் தான் குழந்தையை பழக்க வேண்டும். அதற்கு தான் குழாயில் தண்ணீர் பிடித்து பழகச் சொன்னேன்" என்று, அவர் விளக்கிய போது ஒவ்வொரு பெற்றோரும் குழந்தைகள் வளர்ப்பில் இதுபோன்று மென்மையான முறைகளை பின்பற்றலாமே என்று தோன்றியது. புத்தகங்களை படித்தால் மட்டும் போதாது. படிக்கும் நல்ல விடயங்களை, தக்க தருணத்தில் நடைமுறைப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும் என்ற உண்மை புரிந்தது.

### குழந்தைகளுக்கான நேரமிது

இப்போது நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது. பெற்றோர்கள், கல்வியாளர்கள், கல்வி நிறுவனங்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது. குழந்தைகள் வளர்ப்பில் நாம்தான் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. முதலில், பிள்ளைகளுக்கு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்துங்கள் ஒரு குழந்தையைவிட நாம் உயர்ந்தவர் என்று நினைக்காதீர்கள்.

01. பிள்ளைகள் ஏதாவது செய்தால் எப்பொழுதும் குறை கூறுதல், அவர்கள் பாராட்டும் படி ஏதேனும் செய்தாலும் கண்டு கொள்ளாதிருத்தல் போன்ற செயல்களை பலர் செய்கிறார்கள். இதனால் பிள்ளைகளின் மன வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

02. எந்தக் குழந்தையும் பின்னாட்களில் எப்படி ஆகுமென யாராலுமே கூற முடியாது. மூடன் அறிவாளியாகலாம். பைத்தியம் தெளிந்து சித்தமுடையவனாகலாம். ஆகவே பிள்ளைகளை ஒருகாலமும் தப்பாக மட்டம் தட்டி அலட்சியம் செய்யக்கூடாது.

03. மின்விளக்கை கண்டுபிடித்து மின்ஒளியை எமக்கு தந்த தோமஸ் அல்வா எடிசனை மரமண்டை என்று பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டாலும் பிற்காலங்களில் ஆயிரம் கண்டு பிடிப்புக்களுக்கு அவரே அதிபதி.

04. நுண்ணுயிரியலின் தந்தை என அழைக்கப்படும் வேதியியலாளர் லூயி பாஸ்டியர் சராசரி மாணவனாக பாடசாலையில் இருந்தவர், பின்னாளில் நோபல் பரிசு வாங்கினார்.



05. E=MC2 எனும் சார்பியல் கோட்பாட்டை உலகிற்கு தந்த ஆல்பிரட் ஐன்ஸ்டைனை, அவரின் ஆசிரியர், "இவனை போன்ற மூளை அழுகிய மாணவனை நான் பார்த்ததே இல்லை" என்றார். ஆனால் அவரே 20ஆம் நூற்றாண்டின் அதி சிறந்த விஞ்ஞானியானார்.

06. குழந்தைகளுடன் ஒரு நாளில் சிறிது நேரமாவது பேசுங்கள், நல்லதைப் பேசுங்கள், கனிவுடன் பேசுங்கள். அவர்கள் குறைகளைப் பற்றி அதிக நேரம் பேசாதீர்கள். நிறைகளை பற்றிப் பேசுங்கள்.

07. பிள்ளைகளுடன் யாரையும் ஒப்பிட்டு பேசாதீர்கள், அவர்கள் அவர்களே, நீங்கள் நீங்களே. நீங்களே முன்னுதாரணமாக இருங்கள். உங்களைப் பார்த்து அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

08. வாழ்வில் வெற்றிபெற்றவரைப்பற்றி பேசுங்கள், ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்களைப்பற்றி பேசுங்கள்.

09. எப்படி இருக்கக்கூடாது என்று ஒப்பிட்டு பேசுவதைவிட எப்படி இருக்க வேண்டுமென ஒரு முன்னுதாரண மனிதரைப்பற்றிப் பேசுங்கள்.

10. பிள்ளைகளை வீட்டுக்குள் அடைத்துவைக்காதீர்கள். வீடு ஒரு சிறைச்சாலைக் கூடமில்லை மனிதர்களை தோற்றுவிக்கும் கோயில்.

11. நல்ல உதாரணங்களை கொடுங்கள், சுதந்திரம் கொடுத்து, தெளிவுபடுத்தி, வழிக்குக் கொண்டு வாருங்கள்.

12. மலர்கள் தூவியுள்ள பாதையைப்பற்றி பிள்ளைகளுக்கு சொன்னால், அவர்கள் முட்கள் நிறைந்த பாதையை புரிந்துக்கொள்வார்கள்.

13. உழைப்பைப்பற்றி சொல்லிக்கொடுங்கள், அவர்கள் உழைப்பில்லாத கேடுகளை புரிந்துக்கொள்வார்கள்.

14. வெற்றி பெற்றவர்களை சொல்லும் போது, தோல்வியின் காரணங்களை அவர்கள் அறிந்துக்கொள்வாகள்.

15. சுறுசுறுப்பை சொல்லிக் கொடுத்தால், அவர்கள் சோம்பலை அடையாளம் காண்பார்கள். விதியை வென்றவர்களை சொல்லும் போது, அவர்கள் வேதனையில் நொந்து அழிந்தவர்களை கண்டு கொள்வார்கள். இது போதும் அவர்கள் வாழ்வை தேட.

முதலில் நாம் மாற வேண்டும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. மாற்றம் ஒன்றே மாறாதது. நல்ல மாற்றம் தான் வளர்ச்சியை தரும். பின்லாந்தின் கல்விமுறையிலிருந்து நாம் கற்றுக் கொண்டு மாறுவோம். குழந்தைகளின் எதிர்காலத்தைப் சிறப்பாக மாற்றுவோம். அவர்களே எதிர்கால சாதனையாளர்கள். சாதனைப்பயணத்தின் கதவினை திறந்துவிடுங்கள், அவர்கள் வெற்றியினை நோக்கி நகரட்டும்.

**வைத்தியா ஆர். வி. சசிகரன்**
**அக்குப்பங்சர் வைத்திய நிபுணர்**
**மனவள ஆலோசகர்**

# குடமூதலும் குமுழமுனையும்

வன்னிவள நாட்டின் வளங்கொழிக்கும் முல்லை மாவட்டக் கிராமங்களில் ஒன்று குமுழமுனைக்கிராமம். கொட்டுக் கிணற்றடிப்பிள்ளையாரின் குறையாத அருளும் தண்ணி முறிப்புக் குளத்தின் வற்றாத நீரினாலும் வனப்பும் செழிப்பும் மிகுந்திருக்கும் கிராமமாகத் திகழ்கின்றது குமுழமுனை.

இக்கிராமத்துக்கே உரியதும் பாரம்பரியமானதுமான கலைகளில் ஒன்று குடமூதலாகும். கைகளில் குடங்களைத் தாங்கியபடி பாடலுக்கேற்ப நடன அசைவுகளைக் காண்பிக்கின்ற தனித்துவப் பண்புகளுடன் கூடியதாகக் காணப்படுகின்றது குடமூதல். இன்றும் இக்கலைவடிவம் அழிந்து போகாமல் இப் பிரதேசத்தின் முதுபெரும் கலைஞர்கள் பாதுகாத்து வருகின்றனர்.

முன்னொருபோது இக்கிராமத்தில் நீர்த்தட்டுப்பாடு நிலவியபோது பெண்களும் ஆண்களும் மட்குடத்தைக் கைகளில் சுமந்து இறைவனிடம் மழைவேண்டி ஆடிப்பாடியதாகவும் இவர்களின் வேண்டுதலையடுத்து மழை பொழிந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனைத் தொடர்ந்தே வருடாவருடம் இத்தகைய வேண்டுதல்களை நிகழ்த்தி வந்தபோதே இக் கலைவடிவம் உருப்பெற்றதாகவும் குடமூதல் கலைஞரும் இப்பிரதேச வாசியுமான திரு.நாகலிங்கம் நெல்லிநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இது மட்டுமல்லாது மழையில்லாதபோது இக்கிராமவாசிகள் நீர் எடுத்து வருவதற்காக மட்குடங்களைக் கைகளில் சுமந்தவாறு நீண்ட தூரத்துக்கு நடந்து சென்றதாகவும் இவ்வாறு நரெடுக்கச் செல்லும் போது களைப்புத் தெரியாமலிருக்க ஆடிப்பாடிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. இதுவே பின்னர் குடமூதல் என்ற கலைவடிவமாக மாறியதாகவும் இப்பிரதேச வாழ்மக்கள் சிலர் கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் ஈழத்திருநாட்டிலோ தமிழர் வாழும் பிற பிரதேசங்களிலோ எவ்விடத்திலும் இல்லாத ஒரு அழகிய கலைவடிவமாகத் திகழ்கின்றது குமுழமுனையின் குடமூதற்கலை. ஆரம்ப காலத்தில் ஆண்,பெண் இருபாலாராலும் நிகழ்த்தப்பட்ட இக்கலை, காலப்போக்கில் ஆண்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றது. பாரம்பரியம் மிக்க இக்கலை வடிவைப் பாது காப்பதற்காகத் தற்போதும் ஆலய நிகழ்வுகளிலும் கலாசார விழாக்களிலும் நிகழ்த்தப்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது.

"தானன்னத் தானன்னத் தானானே - தன்ன
தானன்னத் தானன்னத் தானதான"

என்ற தருவுடன் குடமூதற் பாடல் ஆரம்பிக்கின்றது. முதலில் இப்பிரதேசத்தின் பழமை வாய்ந்த ஆலயமான கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையாருக்கு வணக்கம் செலுத்திப் பாடி ஆடுகின்றனர்.

"கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையாரே - பாலர்
கூடிக்க ஏிகொண்டு உன்புகழைக்
கட்டச்சி றுகும்மி பாடஅ ருள்தந்து
காத்திடு வாய்விழி பார்த்திடு வாய்"

எனப்பாடல் ஒலிக்க ஆடல் இடம் பெறுகின்றது. பாடலுக்கு கூட்டுச்சேம் உடுக்கின் ஒலி பாடலையும் ஆடலையும் மெருகூட்டுவதாக அமைகின்றது. முழங்காலளவு உயரத்துக்கு மடித்துக்கட்டப்பட்ட வேட்டியும் காலில் அணிந்த சலங்கையும் உடல் முழுவதும் பூசப்பட்ட வெண்ணிறத் திருநீற்றுக் கோடுகளும் நெற்றியில் வைக்கப்பட்ட சந்தனப் பொட்டுமே குடமூதலுக்கான ஆடை அலங்காரங்கள் ஆகும்.

பின்னணியில் பாடலும் பாடலுக்கேற்ப உடுக்கும் ஒலிக்க குடத்தினைக் கைகளில் ஏந்தித் தாளத்துக்கு ஏற்ப அசைந்து ஆடுகின்றனர். வரிசையில் ஆடுவது, ஒருவரை ஒருவர் தாண்டியாடுவது, வட்டத்தில் ஆடுவது என பல்வேறு வடிவமைப்புக்களை அமைத்து ஆடும் அழகே தனி. அத்தோடு கைகளிலுள்ள குடங்களை எறிந்து ஏந்துவதும் ஒருவர் எறிவதை மற்றவர் பிடிப்பதும் என பல வித்தைகளையும் தாளலயத்துக்கேற்ப நிகழ்த்துவது இரசனையூட்டுவதாக அமைகின்றது.

இவற்றின் நடுவே குடத்தினை வாயில் வைத்து ஊதி ஒருவிதமான ஓசையை எழுப்புவது கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இனிமையாக இருக்கின்றது.



"கொட்டுக்கி ணற்றடி ஓர்தல மாவது
கோதையே சொல்லிற் குமுழமுனை
மட்டுக் கடங்காத லன்கள் புரிவதை
மாநிலம் எப்ப அறியுமடி"

எனக் கொட்டுக்கிணற்றடியான் புகழைப் பாடுவதோடு

"கோட்டகக் கேணிவி நாயகர் தானுமோ
கொக்குத் தொடுவாயில் அந்தமடி
கேட்டு மகிழஅ வரை எந்தநாளும்
கிருபை பெற்றென்றும் போற்றுங்கடி"

என அயல்கிராமங்களின் ஆலயங்களைப் புகழ்ந்து கும்மிப் பாடலமைப்பில் பாடுவதனைக் காண முடிகின்றது.

ஆரம்ப காலத்தில் பெரியவர்களே இக்கலையை நிகழ்த்துவோராக இருந்தமையால் மட்குடங்களையே குடமூதலுக்காகப் பயன்படுத்தினர். இக்குடங்களில் கற்களை இட்டும் ஒலிசெய்து ஆடியுள்ளனர். தற்போது பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவித்து ஆட வைப்பதனால் செம்பாலான நிறைகுடங்களையே பயன்படுத்தி வருகின்றனர்.

முல்லைமாவட்டக் கலைகளில் ஒன்றாகவும் குமுழமுனைப் பிரதேசத்துக்கு உரியதுமான தனித்தன்மை வாய்ந்த கலையினைப் பேணுவதும் பாதுகாப்பதும் மிகவும் அவசியமானதொன்றாக அமைகின்றது.

**வினோஷா வரதராஜன்**



## மகாத்மா காந்தி

உண்மை, அகிம்சை, சத்தியாக்கிரகம் ஆகிய வழிமுறைகளைப் பின்பற்றி இந்திய தேசத்திற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த பெரியார் மோகனதாஸ் காந்தி என அழைக்கப்பட்ட மகாத்மா காந்தி ஆவார்.

கி.பி. 1869 ஆம் ஆண்டு போர் பந்தர் நகரத்தில் பிறந்த காந்தி 1887 மெற்றிக் குலேசன் பரீட்சையில் தோற்றி மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். அங்கு நீதித்துறையில் திறம்படக் கற்று 1891இல் பாரிஸ்ரர் பட்டம் பெற்றார். பின்பு இந்தியாவிற்கு வந்து 1893 தொடக்கம் வழக்கறிஞராகக் கடமையாற்றினார்.

உண்மையைக் கண்டறிவதன் மூலம் சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்ற சிந்தனையை எமக்கு ஊட்டியவர் காந்தி. சூரிய ஒளியும் பெய்யும் மழையும் அனைவருக்கும் சமம். அதே போன்று கல்வியிலும் எவ்வித வேறுபாடுகளுமின்றி சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனப் போராடி வெற்றி கண்டவர் காந்தி. எனவே நாம் காந்தி காட்டிய வழியில் நின்று சமுதாயத்தில் நற்பிரஜையாக வாழ்வோம்.



## வினோபா

வினோபா என்பவர் ஏழுவயதிலே துறவரம் சென்ற, அஹிம்சையை பின்பற்றும் ஆச்சாரியார் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான வக்கீலும் ஆவார். இவர் காந்தியடிகளின் ஆன்மீகவாரிசாக கருதப்பட்டவர். காந்தியடிகள் சபர்மதி ஆச்சிரமம் திறந்த உடனே வினோபா அங்கு சென்றுவிட்டார். இவருக்கு காந்தியடிகள் என்றாலே மிகவும் பிடிக்கும். காந்தியடிகளுக்கு சமைப்பதென்றால் மிகவும் பிடிக்கும். அன்று காந்தியடிகள் சிறப்பாக சமைத்து முடித்துவிட்டு, அவரே பரிமாறினார். காந்தியடிகள் பாகற்காயை வினோபாவிற்கு வைத்தார். வினோபாவிற்கு காந்தியடிகளை பிடிக்கும் ஆனால் பாகற்காயை பிடிக்காது. உடனே பாகற்காயை எடுத்து விழுங்கிவிட்டார். அதைகண்ட காந்தியடிகள் வினோபாவிற்கு பாகற்காய் அதிகம் பிடிக்கும் என நினைத்து மீண்டும் வைத்தார்.

இந்த விடயம் ஊரெல்லாம் பறவியது. யார் வீட்டிற்கு வினோபா அழைக்கப்பட்டாலும், அவருக்கு பிடிக்கும் என்று பாகற்காய் சமைத்து பரிமாறப்பட்டது. இறுதியில் வினோபா இப்படிச் சொல்லுகிறார், "விரும்பியதை விடுவதுதான் துறவரம் என்று நினைத்தேன், ஆனால் விரும்பாததை ஏற்றுக்கொள்வதும் துறவரம் தான் என புரிந்துக்கொண்டேன்" என்று.

# சாதனையும் சரித்திரமும்

...கற்பது என்றும் காவியமாகலாம்






## வில்லியம் ஷேக்ஸ்பியர் வாழ்க்கை வரலாறு

உலக மொழிகளை அலசிப் பார்த்தால் ஒரு சில மொழிகளுக்கு தனிச் சிறப்பு இருப்பதை நாம் உணரலாம். உதாரணத்திற்கு தமிழுக்கு "ழ" என்ற எழுத்து தனிச் சிறப்பு. அதே போல் ஆங்கில மொழிக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஆகக் குறைவாக இருபத்தாறே எழுத்துக்களைக் கொண்ட ஓர் எளிய மொழி என்பதுதான் அந்த தனிச் சிறப்பு. அதனால்தானோ என்னவோ அந்த மொழி இன்று உலக மொழியாக இருக்கிறது. அந்த உலக மொழிக்கு அழகு சேர்த்தவர்கள் பலர். பெருமை சேர்த்தவர்கள் சிலர். அவர்களுள் தலையாயவர் இன்றும் உலகின் பெரும்பாலான பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் தங்கள் பாடத்திட்டத்தில் இணைத்துக் கொண்டிருக்கும் பல அமர இலக்கியங்களைத் தந்த ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியர். அவர் பிறந்ததும், இறந்ததும் ஒரே தினத்தில்தான் ஏப்ரல் 23. 1564-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ஆம் தேதி லண்டனுக்கு அருகில் உள்ள ஸ்ட்ராட்ஃபோர்டு-அபான்-அவான் (Stratford-upon-Avon" என்ற சிற்றூரில் பிறந்தார் வில்லியம் ஷேக்ஸ்பியர்

அவர் பிறந்தது ஏழ்மையில்தான். எட்டுப் பிள்ளைகளில் மூன்றாமவர். அவரது தந்தை ஜான் சேக்ஸ்பியர் கையுறை தைத்து விற்கும் வியாபாரி. தொழில் அவ்வுளவு இலாபகரமாக இல்லை என்பதால் பன்னிரெண்டாவது வயது வரைதான் சேக்ஸ்பியரால் பள்ளிக்குச் செல்ல முடிந்தது. அதன் பிறகு முறையான கல்வி கற்க முடியாமல் போனது. பன்னிரெண்டு வயது வரை இலத்தீன் மொழியில் இலக்கண, இலக்கியத்தை அவர் கற்றார். அவருக்கு பதினெட்டு வயதான போது தன்னை விட எட்டு வயது மூத்தவரான ஆன் ஹதாவேயை (Anne Hathaway) என்ற பெண்ணை மணந்து கொண்டார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன.

23 வயதான போது அவர் பிழைப்புத் தேடி லண்டன் வந்து சேர்ந்தார் அந்த ஆண்டு 1587. அடுத்த ஆறு ஆண்டுகள் அவர் என்ன செய்தார் என்பது குறித்து பலதரப்பட்ட கருத்துகள் நிலவுகின்றன. அவற்றுள் ஒன்றை பார்ப்போம். அந்தக் காலகட்டத்தில் நாடகங்களுக்குப் புகழ் பெற்ற நகரமாக விளங்கியது லண்டன். சில இடங்களில் தினசரி நாடகங்கள் மேடையேறும். பல பகுதிகளிலிருந்து சீமான்களும், செல்வந்தர்களும் குதிரை வண்டிகளில் நாடகம் பார்க்க வருவார்கள். அப்படிப்பட்ட ஒரு நாடக கொட்டகையில் குதிரை வண்டிகளை காவல் காக்கும் வேலை அவருக்குக் கிடைத்தது. அப்படி குதிரைகளை காவல் காத்த ஷேக்ஸ்பியர்தான் பிற்காலத்தில் ஆங்கில இலக்கியத்தின் முகவரியை மாற்றப் போகிறார் என்பது அந்த நாடக கொட்டகையின் உரிமையாளருக்கு அப்போது தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

ஷேக்ஸ்பியருக்கு ஞாபகத்திறன் அதிகம். குதிரைகளை காவல் காக்கும் அதே நேரத்தில் நாடகங்களை ரசித்துப் பார்த்த அவர் வசனங்களை மனப்பாடம் செய்துகொள்வார். இந்த வசனம் இப்படி இருந்திருக்கலாமே என்று தனக்குள் நினைத்துக்கொள்வார். இது சினிமாக் கதை போல் இருந்தாலும் ஒருநாள் அந்தச் சம்பவம் நடந்தது. அரங்கம் நிறைந்த கூட்டம், நாடகம் தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு நாடகத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பவர் வரவில்லை என்பது தெரிந்து பதறிப் போனார் நிர்வாகி.நிலமையை உணர்ந்த ஷேக்ஸ்பியர் அந்த பாத்திரத்தில் தாம் நடிப்பதாகக் கூறினார். வேறு ஒரு நேரமாக இருந்திருந்தால் அந்த நிர்வாகி நகைத்திருப்பார். அப்போது வேறு வழி தெரியாததால் நிர்வாகியும் சம்மதிக்க ஷேக்ஸ்பியருக்கு ஒப்பனை செய்யப்பட்டது. நாடகமும் தொடங்கியது.

தனக்கு முன் நடித்தவரைக் காட்டிலும், அந்த பாத்திரத்தில் மிகச் சிறப்பாக நடித்து பலத்த கைதட்டலையும், பாராட்டையும் பெற்றார் சேக்ஸ்பியர். சில முக்கிய காட்சிகளில் அவர் சொந்தமாகவும் வசனம் பேசினார். அந்த வரவேற்பைப் பார்த்து மகிழ்ந்துபோன நிர்வாகி தொடர்ந்து நடிக்க ஷேக்ஸ்பியருக்கு வாய்ப்புக் கொடுத்தார். சில நாடகங்களையும் அந்த நிறுவனத்திற்காக எழுதிக் கொடுத்தார் ஷேக்ஸ்பியர்.

1592-ஆம் ஆண்டு லண்டன் மாநகரை பிளேக் எனும் கொடிய நோய் அலைக்கழிக்கத் தொடங்கியது. அண்மையில் ஏற்பட்ட சார்ஸ் நோய் எப்படி சில நகரங்களை முடக்கியதோ அதேபோல் பிளேக் நோயால் முடங்கிப் போனது லண்டன் மாநகரம். அதனால் கிட்டதட்ட இரண்டு ஆண்டுகள் அனைத்து நாடக கொட்டகைகளும் மூடிக்கிடந்தன. நாடகக் கலைஞர்களுக்கு பிழைப்பு இல்லாமல் போனது.

லண்டனை அலைக்கழித்த அந்த நோய்தான் பல அமரக் காவியங்களை படைக்கும் வாய்ப்பையும், கால அவகாசத்தையும் ஷேக்ஸ்பியருக்குத் தந்தது. அந்த இரண்டு ஆண்டுகளில் அவர் நிறைய நாடகங்களையும், கவிதைகளையும் எழுதிக் குவித்தார். சோனட் எனப்படும் புதுவகை கவிதைகளையும் அவர் புனைந்தார். பிளேக் நோய் முடிந்தவுடன் அவரது நாடகங்கள் புத்தகமாக வெளி வரத் தொடங்கின. 24 ஆண்டு இலக்கியப் பணியில் அவர் மொத்தம் 37 நாடகங்களை எழுதினார் என்று சொல்வதை விட இயற்றினார் என்று சொல்ல வேண்டும். துன்பியல், இன்பியல் என இரு பிரிவுகளாக அவரது நாடகங்களை வகைப்படுத்தலாம்.

A Midsummer Night's Dream, As You Like It, The Taming of the Shrew, The Merchant of Venice போன்றவை இன்பியல் நாடகங்கள். Romeo and Juliet, Hamlet, Othello, King Lear, Julius Caesar, Antony and Cleopatra, போன்றவை அவரது புகழ் பெற்ற துன்பியல் நாடகங்கள். எத்தனையோ மொழிகளில் எத்தனையோ இலக்கியங்கள் வந்தாலும் இன்றும் காதலுக்கு முகவரி சொல்லும் மிக முக்கியமான உலக இலக்கியம் 'Romeo and Juliet' என்பதை எந்த மொழி அறிஞராலும் மறுக்க முடியாது. உலகம் முழுவதும் ரோமியோ, ஜூலியட் பெயரை உச்சரிக்காத காதலர்கள் இருப்பார்களா? என்பது சந்தேகம்தான். அதே போன்று தன் உயிர் நண்பன் புரூட்டஸ் தன்னை கத்தியால் குத்தும்போது அதிர்ந்து போய் Et tu Brutus? அதாவது நீயுமா புரூட்டஸ்? என்று கேட்டு உயிர் விட்ட ஜூலியஸ் சீசரின் கதாபாத்திரத்தையும் இலக்கிய உலகம் மறக்க முடியாது.

இப்படி கனமான கதாபாத்திரங்களுக்கு வலுவான வசனங்களால் உயிர் ஊட்டியதால்தான் இன்றும் அவை உயிரோவியங்களாக உலா வருகின்றன. தமது படைப்புகள் மூலம் இன்றும் நம்மிடையே உலா வரும் சேக்ஸ்பியர் 1616-ஆம் ஆண்டு ஏப்ரம் 23-ஆம் நாள் தாம் பிறந்த தினத்திலேயே இறந்து போனார். ஓர் இலக்கிய மேதை 52 வயதில் மறைந்து போனது இலக்கிய உலகிற்கு பேரிழப்புதான். தமிழ் இலக்கிய உலகின் அமரகவி கம்பன் என்றால் ஆங்கில இலக்கிய உலகின் அமரகவி சேக்ஸ்பியர்தான். இருவரின் படைப்புகளுமே அமர காவியங்களாக போற்றப்படுகின்றன. எழுதப்பட்டு நானூறு ஆண்டுகளுக்கு பிறகும் உயிரோட்டம் இருக்கிறது என்பதால்தான் உலக பல்கலைக்கழகங்கள் இன்றும் அவற்றை கற்பிக்கின்றன.

ஏழ்மையில் பிறந்து அடிப்படைக் கல்வியைகூட முறையாக முடிக்க முடியாத ஒருவரால் உலகப் புகழ்பெற முடிந்தது என்றால், கல்விக்கான எல்லா வாய்ப்புகளும் இருக்கும் நம்மால் அது முடியாதா? இலக்கியம் என்ற வானம் அவருக்கு வசப்பட்டதற்கு திறமை மட்டும் காரணம் அல்ல தன்னம்பிக்கையும்தான். நமக்குத் திறமை இருந்தால் அதனை ஒரு கூடுதல் பலமாக ஏற்றுக்கொண்டு தன்னம்பிக்கையை முதலீடு செய்வோம். திறமை இல்லாவிட்டாலும் தன்னம்பிக்கையோடு விடாமுயற்சியை முதலீடு செய்வோம்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையின்

# நாடகம் சங்கிலியன்

பாகம் 01



## காட்சி : 01

இடம் : நல்லூர் இராசதானி
பாத்திரங்கள் : சங்கிலியன், காக்கை வன்னியன், வீரமாணிக்க தேவன், அப்பா-முதலி
யாழ்ப்பாண இராட்சியம் மீது வெள்ளையர்கள் ஆக்கிரமிக்கத் துடிக்கும் நேரமது சங்கிலியன் போர் ஆய்தம் செய்கிறான்.

சங்கிலியன் : வீரர்களே இமயக்கல்லை வீரம் செறிந்த கனகவிஜயர் தலையிலே சுமத்திய தமிழ்க் குலத்துக்காளைகளே, அன்னமிட்டோம் ஆனால் கன்னமிட்டார்கள் அந்நியர்கள், அறம் வளர்த்த நாட்டிலே மறம் தாண்டவமாடுவதா, பெற்று வளர்த்து பாலூட்டி தாலாட்டிய தாய்த்திரு நாட்டை பழிகாறன் பாதங்கள் தீண்டுவதா, உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லா ஆண்மைத் தோழர்களே போர்க்களம் செல்லத் தயாராகுங்கள். வாழ்வா அல்லது சாவா, வெற்றியா அல்லது வீர மரணமா, ஏர் பிடிக்கும் செங்கரங்கள் என ஏமாந்த கூட்டத்திற்கு இது வாள்பிடிக்கும் வன்கரங்கள் என படைமுகத்தே காட்டுவோம். மறத்தமிழ் வீரர்களே அணி அணியாகத் தயாராகுங்கள், வெற்றி வாகை சூடுவோம். காக்கை வன்னியா விரைந்து செயல்படுங்கள்.

கா.வன்னியன் : மாமன்னா போருக்குத் தயாராய் இருப்போம், படையினரைத் தயார் செய்வோம்.. பகைவர்களின் படைப்பலத்தை நான் கண்காணிக் கின்றேன்.

சங்கிலியன் : வீரமாணிக்கதேவா, நீ என்ன சொல்கிறாய்..

வீ.மா.தேவன் : மன்னா பரந்திருக்கும் போர்வீரர்களை ஒன்றுசேர்த்து அணிகளைப் பிரிப்போம், ஆயுதசாலைகளை நிரப்புவோம். அத்தோடு களஞ் சியங்களையும் நிரப்புவோம்..

சங்கிலியன் : அப்பா முதலியாரே ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்

அப்பாமுதலி : மன்னா மன்னா சகலதையும் நிறைவேற்றுவதே எமது பணி.. மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை நான் பார்த்துக்கொள்கிறேன்.

சங்கிலியன் : இன்றிலிருந்து போருக்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள், விரைந்து செயற்படுங்கள்.. வெற்றி அல்லது மரணம்..

## காட்சி : 02

இடம் : அடர்ந்த காடு
(வீரமாணிக்க தேவன் குதிரையில் வருதல், காக்கை வன்னியனும் வீரநாயக்கனும் சதித்திட்டத்துடன் வீரமாணிக்க தேவரை எதிர்கொள்ளல்)
(காக்கை வன்னியனும், வீரமாணிக்க தேவனும் உரையாடுதல், வீரநாயக்கன் பற்றைக்குள் மறைந்திருத்தல்)

கா.வன்னியன் : தளபதி

வீர.தேவன் : சிற்றரசே எங்கிருந்து இந்தநேரத்தில் இம் மார்க்கமாக வரு கிறீர்கள்..

காவன்னியன் : வேந்தனைப் பார்க்க வந்தேன், அவர் குமரக்கோட்டம் சென்றதாக அறிந்தேன், ஆதலால் இத்திசையாக வந்தேன். தளபதியாரே தங்களுடன் மிக முக்கியமான விடயமொன்று ஆலோசிக்க வேண்டும்.

வீர.தேவன் : என்னுடனா அப்படி முக்கியமான காரியம் என்னதான் இருக் கிறதோ..

கா.வன்னியன் : நாட்டை நேசிக்கும் வீரனான தங்களை வேந்தன் சந்தேகக் கண்களுடன்

வீர.தேவன் : நெஞ்சுரமற்றோனுக்கு வாளும், நீதி உரைக்கத் தெரியாதவனுக்குச் சட்டமும் பதவி மோகக் காறனுக்கு இன உணர்ச்சியும் ஆபத்தானவை. வேந்தன் எதையும் கூறட்டும், எனது பதவியையும் பொறுப்பையும், உதாசீனம் செய்ய மாட்டேன்...

கா.வன்னியன் : வீரமாணிக்க தேவரே கள்ளம் கபடமற்ற தங்கள் உள்ளத்தை சோதிப்பதற்காக நான் கூறிய அலட்சிய வார்த்தைகள் அவற்றை
வீர.தேவன் : நடைபெறப்போகும் சம்பவங்களின் எதிரொலிதான் இந்த அலட்சிய வார்த்தைகள்..

கா.வன்னியன் : என் மீது சந்தேகமா?

வீர.தேவன் : சந்தர்ப்பவாதிகளைச் சந்தேகிக்காமல் பகுத்தறிவு வாதிகளையா சந்தேகிப்பது.

கா.வன்னியன் : அந்தப் பகுத்தறிவைப் பரிசீலிக்கும் படிதான் தங்களைக் கேட்கிறேன்.
வீரர்.தேவன் : பகுத்தறிவை பரிசீலித்தபடியால் தான் தமிழன் என்றொரு இனமுண்டு என்பதையும், தனியே அதற்கொரு குணமுண்டு என்பதையும் இன்றுவரை காத்துவருகிறோம்..

கா.வன்னியன் : அந்நியருடன் நாம் ஏன் கலந்து வாழக்கூடாது.

வீர.தேவன் : கல்லோடு கல் சேர்த்து கனல் கண்ட கற்காலம் முதல், மண்விட்டு விண்ணின்று மாயப்போர் செய்யும் இக்காலம் வரை தனிமையில் தரணியாண்ட தமிழன் இனிமேலும் பிணைந்து வாழ முடியுமா?

கா.வன்னியன் : வீரமாணிக்கதேவா.. நீ அளவுக்கு அதிகமாகப் பேசுகிறாய்.. ஏன் சேர்ந்து வாழக்கூடாதுதா?

வீர.தேவன் : எமக்கொரு வரலாறு உண்டு, அந்த வரலாறுகளை நீங்கள் மறந்துவிடாதீர்கள்...

கா.வன்னியன் : வீரமாணிக்கதேவா முதலில் உன் வாய்ப்பேச்சை நிறுத்து

வீர.தேவன் : கா்கைவன்னியா பேச்சோடு செயலும் என்னிடமுண்டு.

கா.வன்னியன் : நான் சிற்றரசன் நீ தளபதி மறந்துவிடாதே..

வீர.தேவன்: அது பதவியில், செயலில் அல்ல.

கா.வன்னியன் :நான் வாள் வீச்சில் வல்லவன்..

வீர.தேவன் : நான் வாள் வீச்சோடு, வாள் தடுப்பதிலும் வல்லவன்.

கா.வன்னியன் : நான் இட்ட ஆணையை நீ செய்பவன்

வீர.தேவன் : உன் உதவாக்கரை ஆணையை நான் ஏற்கமாட்டேன்..

கா.வன்னியன் : வாள் போரில் ஆசையிருந்தால். (வாளை எடுத்து வீசுகிறான்)

வீர.தேவன்: பார்ப்போம்.. (வீரமாணிக்கதேவனும் தடுத்துப்போர் புரிகிறான்.... காக்கை வன்னியன் வாள் வீழ்ந்த நிலையில் பின்பக்கம் பார்க்கிறான் மறைவிலிருந்து எதிரப்பட்ட வீரமாணிக்க தேவரின் முதுகில் குத்துகிறான்.)

வீர.தேவன்: (காயம்பட்ட நிலையில்) ஆ.. தாழ்ந்த தமிழினமே சதிகாறக் கும்பலே, பதவி மயக்கத்தின் பரிசு இதுதானா, சத்தியத்திற்குச் செய்யும் பாத காணிக்கை இதுதானா.. அல்லூறும் தமிழினத்திற்கு ஆலகால விசத்தை ஊட்டி அக்குவேறு ஆணிவேறாகப் போட்ட சதித்திட்டம் இதுதானா? காக்கைவன்னியா வஞ்சம் தீர்க்கும் வெள்ளையரின் வாசாலங்காரத்தில் மதிமயங்கி இனத்தை அழிக்கும் தனிப்பெரும் தலைவன் நீதானா? உன் கரத்தால் உனது வாளை என்மீது பாச்சியிருந்தால் இனக்கத்தி பாய்ந்ததே என்று எண்ணி நிம்மதியாக இறந்திருப்பேன்.. என்ன செய்வது முதுகில் குத்தவைத்துவிட்டாய்.. வீரவேந்தே சங்கிலிமன்னா உன் ஆபத்துக்காலத்தில் என் ஆவி பிரிகிறதே.

தொடரும்....

வசன நடை: சி.வ. ஏழுமலைப்பிள்ளை



# சிறுவர்களும் சிறுகதையும்

நன்நெறிகளை கதையாய் சொல்வோம்



## பிறரை வஞ்சித்தால் நீயும் வஞ்சிக்கப் படுவாய்

ஒரு காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு எப்போதும் யாரையாவது ஏமாற்றி. அவர்கள் ஏமாறுவதைக் கண்டு மனம் மகிழ்வது பொழுது போக்காக இருந்தது. ஒரு நாள் கொக்கு ஒன்றை சந்தித்தது. அதனுடன் நட்புக் கொண்டு, அந்தக் கொக்கை நரி தன் வீட்டில் நடைபெறும் விருந்திற்கு அழைத்தது. கொக்கும் நரியை நண்பன் என நினைத்து அதனுடைய வீட்டிற்குச் சென்றது.

கொக்கைக் கண்ட நரி ஒரு தட்டில் கஞ்சியை எடுத்து வந்து கொக்குக்கு உண்ணக் கொடுத்தது. கொக்கு அதன் நீண்ட அலகால் தட்டிலிருந்த கஞ்சியை சாப்பிட முடியவில்லை. ஒரு வாயகன்ற ஜாடி போன்ற பாத்திரங்களில் இருந்தால் மட்டுமே கொக்கு தன் அலகை அதனுள் விட்டு கஞ்சியை உறிஞ்சிக்குடிக்க முடியும்.


கொக்குபடும் துன்பத்தைக் கண்டு நரி சிரித்து மகிழ்ந்தது. அவமானம் அடைந்த கொக்கு நரிக்கு பாடம் புகட்டத் தீர்மானித்தது. நரியை ஒரு நாள் கொக்கு விருந்திற்கு அழைத்தது. வந்த நரியை நன்கு உபசரித்த கொக்கு ஒரு வாய் குறுகிய ஜாடியில் கஞ்சியைக் கொண்டு வந்து வைத்தது.

நரியின் நாக்கால் நக்கி கஞ்சியை குடிக்க முடியவில்லை. அதைக் கண்ட கொக்கு "நரியாரே இப்பொழுது எப்படி உங்களால் கஞ்சியை குடிக்க முடியவில்லையோ அதே போல் தட்டில் இருந்தால் என்னாலும் குடிக்க முடியாது என தெரிந்தும், எனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி மனம் மகிழ்ந்தீர்கள். ஆனால் நான் அப்படியில்லை

உங்களுக்கு பாடம் புகட்டவே ஜாடியில் கஞ்சியை வைத்தேன்" என்று கூறியபடியே கஞ்சியை தட்டில் ஊற்றிக் கொடுத்தது. தன்னை ஏமாற்றிய நரிக்கு கொக்கு நல்லதே செய்தது.

நரி தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்துவிட்டு கஞ்சியைக் குடித்தது. அது முதல் திருந்திய நரி பிறகு யாரையும் ஏமாற்றுவதில்லை. பிறரை வஞ்சித்து அவர் படும் துன்பம் கண்டு மகிழ்ச்சியடையாது. மற்றவர்களுக்கு நாமும் எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

## நிறம் தீட்டுவோம்





## வசனம் எழுதுவோம்

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................




ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா ஒரு
குழந்தையை வையாதே பாப்பா



கொத்தித் திரியுமந்தக் கோழி அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எதஷ்தித் திருடுமந்தக் காக்காய் அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா



சின்னஞ் சிறுகுருவி போல நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா





# ஆலயங்களும் அற்புதங்களும்

### ஆலயம் தொழுவது சாலவும் நன்று



## மாமிசம் உண்டவனை மணி அடித்துப் பார்க்க வைத்த வள்ளி மணவாளன்

பகுதி இரண்டு "மாமிசம் உண்டவனை மணி அடித்துப் பார்க்க வைத்த வள்ளி மணவாளன்" என்ற தலைப்பின் 2ம் பகுதியின் கீழ் அடியேன் என் தாய் ஓம் சக்திவேலுக்கு ஆற்றும் தொண்டை இவ்வுலகிற்கு எடுத்து கூறி வருகிறேன். "வேலனின் அருளில் உலகம் உய்ய" என்ற 2ம் வெளியீட்டில் அடியேன் லண்டனில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறேன் என்று உங்களுக்கு கூறியிருந்தேன். இந்த 3ஆவது வெளியீட்டில் மீண்டும் இலங்கையில் நடந்த சில விடயங்களை உங்களுக்கு கூறும்படி என் தாயின் கட்டளைக்கு இணங்கவே மீண்டும் எழுதுகிறேன்.

நட்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தான் இத்தொடரில் உங்களுக்கு எடுத்து கூற சொல்லுகிறார். வல்வை சிவகுரு வித்தியாசாலை பாடசாலையிலிருந்து இன்று வரையும் இருக்கும் ஒரே நண்பர் கனகராஜா கஜந்தன். ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பறையில் படித்த கட்டை நெட்டை நண்பர்கள் நாங்கள்.

இன்றும் உடன் படித்த மாணவர்கள் எங்கு பார்த்தாலும் உன்னுடைய நண்பனை பார்த்தியா? அவனுடன் கதைக்கிறியா? என்றெல்லாம் இன்றுவரையும் கேட்பார்கள். அந்த அளவுக்கு எங்களுடைய நட்பு எமது பாடசாலையில் எல்லோரும் வியக்கும் அளவிற்கு இருக்கும். நண்பன் கஜந்தனை பற்றி கூறுவதற்கு இத்தொடர் பத்தாமல் போய்விடும். அதனால் சுருக்கமாக ஒரு சம்பவத்தை அறியத்தருகின்றேன்.

நாங்கள் தனிபோதனை சாலையில் (tution) படிக்கும் போது, தவறுதலாக என் கால் பெருவிரலில் மேசை விழுந்தவுடன் இரத்தக் கசிவு ஏற்பட்டது, அப்போது அங்கிருந்த ஆசிரியர், "நண்பர்கள் யாரும், இங்கு இருக்கிறார்களா?" என்று கேட்டார். அங்கு என் உறவினரும் வகுப்பறையில் என்னுடன் பாடம் படித்துக்கொண்டிருந்தார். யாருமே முன் வராதபோதும் நண்பன் கஜந்தன், நான் இருக்கிறேன் என்று எழுந்து நின்று பத்திரமாக தனது இரு சக்கர வண்டியில் அழைத்து வந்தான்.

மருத்துவமனையில் செவிலியராக பணி புரிந்த தனது தாயாரை வரவழைத்து மருந்து கட்டினான். காயம் மாறும் வரை தன் தாயை ஒவ்வொரு நாளும் அழைத்து வந்து மிக கவனமாக பார்த்துக் கொண்டான். இச்சம்பவத்தை அவன் கூட மறந்திருக்கலாம். இந்நூலின் மூலம் அதை மீண்டும் அவனுக்கு நினைவூட்டுகிறேன்.

அது மட்டுமன்றி, பரீட்சை நாட்கள் வரும்போதெல்லாம் அதற்குரிய மாதிரி தன்னையும் என்னையும் தயார்படுத்துவான். எப்படி என்றால் நானோ நித்திரையாகி விடுவேன். இரவிரவாக பாடமெல்லாம் படித்து அதையெல்லாம் தொகுத்து தன் நண்பனுக்கு முன்னே தான் எழுந்து வருகின்ற பரீட்சை பற்றி விளக்கம் தருவான். கஜந்தனிடம் படித்த முதல் மாணவன் அடியனே. தன் நண்பனை எவ்வாறாவது நல்ல மதிப்பெண் எடுக்கவைக்க வேண்டுமென்று தன்னையே வருத்தும் அடியேனின் நண்பன் யாழ். மெத்தடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை பருத்தித்துறையில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றான்.

என் தாய் (ஓம் சக்திவேல்) அடியேனுக்கு அனுப்பிவைத்த நண்பன் கஜந்தன் நட்புக்கு இலக்கணம் இவரின் செயல். எந்தவொரு நண்பன் தன் நண்பனை முன்னேற்றும் பாதைக்கு எடுத்து செல்கிறானோ அவனே உன்னதமான நண்பன்.

இன்றைய உலகத்தின் நட்பு எவ்வாறு இருக்கிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? உங்களுடைய நண்பன் உங்கள் வாழ்க்கையை உயர்த்த நினைக்கின்றானா?

"யாரொருவர் உனக்காக, உன்நலனுக்காக உன் உயர்வுக்காக என்ன செய்தாலும் அவரே உன் நண்பன், அதுவே உண்மை நட்பு" இதை நீ ஏற்றுக்கொள், நீ ஏற்க மறுத்தால் நீ மனிதனாக இருப்பதே.......

"உன்னோடு உன் பாடசாலையில், உன் வகுப்பறையில், உன் வீட்டில், உன்னோடு படித்தவன் உன் நண்பன். உனக்கு பாடம் புகுத்தியவன் இன்று பல்கலைக்கழகத்தில் படிக்கின்றான். ஆனால் நீயோ உன் படிப்பை ஏன் குழப்பி விட்டாய்?".........

இது அடியேனை வளர்த்த மாமியின் கேள்வி?
நண்பனை போலவே படித்திருந்தால், பல்கலைக்கழகம் சென்றிருக்கலாம் நல்லதொரு வாத்தியார் ஆகியிருக்கலாம்

மாமியின் கேள்விக்கும், உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களுக்கும் விளக்கத்தை வெகு விரைவில் தருவேன்.....

"ஓம் சக்திவேல் ஓம்"

சந்நிவேலின் ஆசை புத்திரன் ஓம் சக்திவேலின் தவப்புதல்வன் ஓம் சக்திவேல் ஆலயத்தின் பூசகர், லண்டன் ஓம் சக்திவேல் ஆலய நிர்வாகி, செல்வாநகர், கிளிநொச்சி சக்திவேல் இந்து சங்க தலைவர், ஐக்கிய இராச்சியம்.



**மனிதன் உருவாக்கிய மதம் பெரிதா?**
**இறைவன் உருவாக்கிய மனம் பெரிதா?**
Is the religion that man created is bigger?
Is the heart that lord created is bigger?

ஓம் சக்திவேல் ஆலயம்
கந்தன்குளம்,
செல்வாநகர், கிளிநொச்சி.
தொ.பேசி - 021 435 4316

## ஹிஸ்புல்லாவின் கருத்துக்கு ரனில் போர்க்கொடி மைத்திரியின் முடிவுக்கும் சரியான பதிலடி

இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருந்தாலும், சர்வதேச ரீதியில் பெரும்பான்மையினர், இதனால், யாருடைய அச்சுறுத்தல்களுக்கும் கீழ்படிய மாட்டார்கள் என எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்த கருத்தை பிரதமர் கண்டித்துள்ளார். கொழும்பில் அலரிமாளிகையில் இன்று சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற விசேட சந்திப்பின் போது இதனை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

அவர் அவ்வாறான அறிவிப்பு குறித்து இதுவரையில் எந்தவித மறுப்பையும் வெளியிடாதுள்ளதாகவும் பிரதமர் விசனம் தெரிவித்துள்ளார்.

இலங்கையர் ஒருவராயின், நாட்டில் தற்பொழுது நிலவும் நிலைமையை விளங்கிக் கொண்டு பெரும்பான்மை யார்? சிறுபான்மை யார்? என்பதை விளங்கி, சகலருடனும் இணைந்து உரிமைகளை பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாவிட்டால், அமைச்சரவை இரத்து செய்யப்பட்டதாக அர்த்தப்படாது.

அத்துடன், பெரும்பான்மையுள்ள தலைவர் என்ற வகையில் பிரதமர் பதவிக்கு தாம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், நாடாளுமன்ற அனுமதிக்கு அமையவே தம்மால் அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய தினம் இடம்பெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடுத்து நிறுத்தியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாகவே அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாவிட்டால், அமைச்சரவை இரத்து செய்யப்பட்டதாக அர்த்தப்படாது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

## பௌத்த பிக்குவிற்கு மனோ எச்சரிக்கை



முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்திற்கு நீண்டகால வரலாறு காணப்படும் பட்சத்தில் ஆலய விவகாரத்தில் தலையிடும் பௌத்த பிக்குவிற்கு எதிராக தேசிய ஒருமைப்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு நேரடியாக தலையிட்டு வழக்கு தாக்கல் செய்யும் என அமைச்சர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட நிலையில், குறித்த சர்ச்சை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே அமைச்சர் மனோ கணேசன் இந்தத் தகவலைக் கூறியிருக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மலை பகுதியிலுள்ள நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தை கைப்பற்றிவைத்திருந்த சிறிலங்கா இராணுவம் பின்னர் குறித்த காணியை விடுத்த போதிலும், படையினரின் ஆதரவுடன் ஆலயக் காணியை பலவந்தமாக கைப்பற்றிய கொலம்ப மேதாலங்க தேரர் விகாரை ஒன்றை நிறுவியதுடன், பாரிய புத்தர் சிலையொன்றையும் நிர்மாணித்துள்ளார்.

அத்தோடு ஆலய வளாகத்தில் பூசை வழிபாடுகளுக்கு சென்ற ஆலய நிர்வாக சபையினருக்கும், பிரதேச மக்களுக்கும் இடையூறும் ஏற்படுத்தியுள்ளார். இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முல்லைத்தீவு பொலிஸாரால் வழக்கு தொடரப்பட்டது.

இதன்போது இரண்டு பகுதியினரும் குறித்த பிரதேசத்தில் வழிபாடுகளை தங்குதடையின்றி செய்வதற்கும், நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் ஆலய வழிபாட்டு செயற்பாடுகளுக்கு குறித்த பௌத்த மதகுரு இடையூறு விளைவிக்கக் கூடாது எனவும் நிபந்தனை விதித்து இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்து நீதிமன்றம் கடந்த ஆறாம் திகதி தீர்ப்பை அறிவித்திருந்தது.

இந்நிலையில் பௌத்த விகாரை பௌத்தர்களுக்கு சொந்தமான விகாரை என தெரிவித்து அண்மையில் புல்மோட்டை வெலிஓயா மற்றும் கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களும் பௌத்த பிக்குகளும் இணைந்து கவன ஈர்ப்பு போராட்டமொன்றையும் நடத்தியிருந்தனர்.


புதிய தமிழ் நாதம்
சமூக முன்னேற்றத்திற்கான வார இதழ்...
நாதம் 01 - வைகாசி 29 - 2019 / June 12 - 2019
puthiyathamilnaatham@gmail.com
இல 05, பழைய கச்சேரி அருகாமை, கண்டி வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி எண் 0764917049 0755206848


## அத்திப்பட்டியும் ஆமையன்குளமும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு பகுதியில் 09.06.2019 அன்று ஜனாதிபதியின் அபிவிருத்தி என்ற போர்வையால் மூடி ஒரு இனத்தின் அடையாளங்களை இல்லாது ஒழிப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலையா மகாவலி அபிவிருத்தி L வலயம் என சிந்திக்க வைக்கிறது. தமிழ் மக்களின் மனங்களில் இரத்த நதியைப் பாயவிட்டு அபிவிருத்தி என்ற பெயரில் ஆண்டாண்டு காலமாக அடையாளம் காட்டி நின்ற ஆமையன்குளம் என்ற பெயரை நீக்கி "கிரி இப்பன் வெவ" என சிங்களப் பெயரைச் சூட்டி திறந்து வைத்துள்ளார். காலங்காலமாக புவியியல் ரீதியான வரைபடத்தில் காணப்பட்ட மணலாறு என்ற பெயரை நீக்கி "வெலிஓயா" என மாற்றம் செய்யப்பட்டு புதிய பிரதேச செயலாளர் பிரிவும் உருவாக்கப்பட்டதும் பலரும் அறிந்ததே. இதே போன்ற செயற்பாடுதான் தற்போது நடந்தேறியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசன செயற்திட்டத்தினூடாக தமிழ் மக்களின் அடையாளங்களை மறைக்கின்ற செயற்பாடா என்று எண்ணத் தோன்றுகின்றது. அத்துடன் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற ஒரு இனத்தின் இருப்பிடங்களை சீர் குலைப்பது அந்த இனத்தினுடைய இருப்பு கேள்விக்குறியாக்குவதேயாகும். தமிழர்களும் காலங்காலமாக இந்த இலங்கைத் தீவில் தமது இனத்தினுடைய அடையாளங்களோடு வாழ்கின்ற ஓர் இனம். இவ்வாறான செயற்பாடுகளினூடாக இந்நாட்டில் தமிழர்கள் வாழமுடியாது என்று சொல்ல முனைகின்றார்களா? நாம் ஒருபோதும் பிரிவினையை விரும்பியதுமில்லை, விரும்புபவர் களுமில்லை. சமத்துவமாக சமூக கோட்பாடுகளுடன் வாழ வேண்டுமென்பதே எமது சிந்தனையாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைவது அபிவிருத்தியே. இதையே மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுத்தி இருந்தார். இவ் விடயம் வரவேற்கத்தக்கதொன்றாகும். இருந்தும் இச் செயற்பாடுகளினூடாக நடைமுறைக்கு சாத்தியமற்ற சில செயற்பாடுகளை செயற்படுத்துவது மிகவும் மனவருத்தத்தை தருகிறது. இவ்வாறு எமது வாழ்விடங்களில் அபிவிருத்தி என்ற நோக்கில் கிராமங்களின் பெயர் மாற்றங்கள், நில அபகரிப்பு சட்டத்திற்கு முரணான மீள் குடியேற்றங்கள் போன்றவற்றை அனுமதிக்க முடியாது.

இதற்கு உதாரணமாக மணலாறு என்ற தமிழர் பாரம்பரிய நிலத்தை "வெலிஓயா" என்று பெயர் மாற்றம் செய்திருப்பதும், அப்பிரதேசத்தில் தமிழர்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்த இடங்களில் சட்டத்திற்கு முரணான குடியேற்றங்களை கட்டவிழ்த்து விட்டிருப்பது துன்பியலான சம்பவமென்பதோடு சாட்சியங்களாகவும் பதிவாகியுள்ளது. இவ்வாறான விடையங்களை வைத்து நோக்குகின்ற போது தென்னிந்திய சினிமா திரைப்படத்தில் (சிட்டிசன்) காணப்பட்ட அத்திப்பட்டி என்ற கிராமத்தில் அந்த இனத்தையும் அதன் அடையாளங்களையும் இல்லாதொழிக்கப்பட்டு அத்திப்பட்டி கிராமமே முற்றாக புவியியல் ரீதியாக மறைக்கப்பட்டிருந்தது. அதைப் போன்றதொரு செயற்பாட்டினை செயற்படுத்துவதற்கு ஒத்திகையாக ஆமையன்குளத்தின் சிங்களப் பெயர் மாற்றம் அமைந்துள்ளதோ என்ற கேள்வி பலரிடத்திலும் எழுந்துள்ளது.

# StarRest

கிளிநொச்சி மண்ணில் மிக பிரமாண்டமாக
அமையப்பெற்ற கைராசி நிறுவனம்

## Grand Wedding Hall Luxury Apartment Rooms






அமைதியான அழகான இயற்கை சூழலில் உங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. உங்கள் விருப்பத்திற்கேற்ப மங்கலகரமான திருமண நிகழ்வா, பூப்புனித நீராட்டு விழாவா, பிறந்தநாள் கொண்டாட்டமா, ஒன்றுகூடலா, எதுவாகினும் எம்முடன் சினேகபூர்வமாக கலந்துரையாடி உங்கள் மனதுக்கு பிடித்த சேவையினை வழங்க நாம் காத்திருக்கின்றோம்.

- ஆயிரம் பேரைஉள்ளடக்கக்கூடிய குளிரூட்டப்பட்ட மண்டப வசதி
- நாவிற்கு இதமான சைவ அசைவ அறு சுவை உணவு வகைகள்.
- வாகன தரிப்பிட வசதி.
- இந்து கிறிஸ்தவ முறைப்படியான கண்கவர் மணவறை சோடனை உட்பட நிகழ்விற்கான அனைத்து வசதிகளும் எம்மிடம் உள்ளன.
- வாடகை கார் வசதிகள்.
- மணப்பெண் அலங்கார ( Beauty Palour ) வசதிகள்.
- மணமக்களுக்கான அதிநவீன வசதிகளுடனான அறைகள் (Room)
- வீடியோ போட்டோ அல்பம் வசதிகள்.
- இலவச WIFI



***160th, Mile Post, 5th Canal lane, A9, Paranthan. Tel. 0212280555.***

ஓம் சக்திவேல் ஓம்

OM SHAKTHIVEL OM

ஓம் சக்திவேல் கோவில் - கிளிநொச்சி

"அருவமும் உருவமுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

"Aruvamum uruvamaagi anaathiyai palavai ondrai
Brahmamai ninra sothi pilambathor meniyaaki
Karunaikoor mugangal aarum karangal pannirandum konde
Oru thirumurugan vanthangu uthithanan ulagam uyya"

**அன்பார்ந்த அடியார்களே!**

செல்வாநகர் கிளிநொச்சியில் அமைந்திருக்கும்
**ஓம் சக்திவேல்** கோவிலின்
மணவாள கோலம்
**(செவ்வாய்க்கிழமை 02.07.2019 7.15am to 12.15pm)** அன்று
**மஹா சங்காபிஷேகம்** நடைபெறும்

-பக்தர்களை ஓம் சக்திவேல் அருளைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்-
ஆலய நிர்வாகம்.




- All the devotees are welcome and get Om Shakthivel blessing -

ஓம் சக்திவேல் கோவில்
கந்தன்குளம், செல்வாநகர், கிளிநொச்சி.
Tel : 021 435 4316
Web : www.shakthivelkovil.com | E-mail : Shakthivelkovil@gmail.com

# NALIN IT
## Technologies Pvt Ltd.

hp dell brother intel KASPERSKY EPSON GIGABYTE ASUS Lenovo TVT HIKVISION RICOH Canon

**கிளி/மத்தியகல்லூரி முன்பாக**

அனைத்துவிதமான கணனிகள், மடிக்கணனிகள், பிறிண்டர்கள், UPSகள்திருத்திக்கொடுக்கப்படும். மற்றும் கண்காணிப்புக் கமெராக்கள், வரவுப்பதிவு இயந்திரம் என்பன பொருத்திக் கொடுக்கப்படும்



- கணனி விற்பனை
- கணனி உதிரிப்பாகங்கள் விற்பனை
- மடிக் கணனிகள் (LapTop) விற்பனையும் சேவையும்
- பிறிண்டர் விற்பனையும் சேவையும்
- கணனி வலையமைப்பு (Network)
- உள்ளக தொலைபேசி (Intercom)
- கண்காணிப்பு கமெரா (CCTV)
- எச்சரிக்கை அலாரம் (Alarm system)
- Door lock access control installation
- வரவுப்பதிவு இயந்திரம் (Fingerprint)
- POS System விற்பனையும் சேவையும்
- மாநாட்டு அரங்கிற்கான ஒலியமைப்பு சாதனம் (Conference Sound System)



இல : 3561,
A9வீதி. கிளிநொச்சி

T.P: 021 228 5550
Mob: 076 359 7610